விலை: 30.00
பக்கங்கள் : 16
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 029 வள்ளுவர் ஆண்டு 2053 தை 04 திங்கட்கிழமை (17.01.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கலயாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## கூட்டமைப்பு – ஜனாதிபதி விரைவில் சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் விரைவில் சந்திப்பு ஒன்று நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த மாத இறுதி வாரத்தில் இந்தப் 15

## இவ்வருடம் உணவுப் பற்றாக்குறைக்கு இலங்கை முகங்கொடுக்க நேரிடும்

### ஐ.நா.சபை எச்சரிக்கை

(ஜெனிவா)

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக ஏற்பட்ட நெருக்கடிகளின் தொடர்ச்சியாக இவ்வருடம் உணவுப் பற்றாக்குறை, வெளிநாட்டுக் கையிருப்பு வீழ்ச்சி, உயர் கடன் இடர் உள்ளிட்ட பல்வேறு சவால்களுக்கு இலங்கை முகங்கொடுக்கக் கூடும் என ஐக்கிய நாடுகள் சபை 15

### எதிர்வரும் மார்ச் மாதம் 5ஆம் திகதி

# சந்திரிகா தலைமையில் புதிய அரசியல் அணி

### உதயமாகும் என்கிறார் குமார வெல்கம எம்.பி



(கொழும்பு)

ராஜபக்ச தரப்புக்கு எதிர் சக்தியாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையில் புதிய அரசியல் அணியொன்று எதிர்வரும் மார்ச் மாதம் ஐந்தாம் திகதியளவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம கூறியுள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)



ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்
எழுதும்
தை மாத இராசி பலன்கள்

## 4 நாளாந்தம் மணிநேர மின்வெட்டு!

மின்சார சபை பொறியியலாளர் சங்கம் எச்சரிக்கை

5

### கொடிகாமத்தில்

## வீடு புகுந்து பெண் மீது தாக்குதல்

(15ஆம் பக்கம் பார்க்க)

### கிளி., முல்லைத்தீவு மாவட்டங்களின்

## பிரதேச செயலாளர்கள் மூவருக்கு இடமாற்றம்

(முறிகண்டி)

வடக்கில் மூன்று பிரதேச செயலாளர்களிற்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேச செயலாளராக 15

### நாளை வரை மின்சாரம் தடைப்படாது

## மின் துண்டிப்பு தொடர்பில் இன்று இறுதித் தீர்மானம்

### அமைச்சர் காமினி லொக்குகே

(கொழும்பு)

மின் துண்டிப்பு தொடர்பில் தீர்மானம்மிக்க கலந்துரையாடல் ஒன்று 15

## துன்னாலையில் வாள்வெட்டு; இளைஞன் படுகாயம்!

(கரணவாய்)

வடமராட்சி துன்னாலை கிழக்குப் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று ஞாயிற்றுக் கிழமை மாலை இடம் 15

### அரசியல் அமைப்பை உருவாக்குவதற்கு

## சுதந்திரக் கட்சி இதுவரை 48 கட்சிகளுடன் பேச்சு

(கொழும்பு)

பலம் பொருந்திய அமைப்பொன்றை உருவாக்கும் நோக்கில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இதுவரை 48 கட்சிகளுடன் கலந்துரை 15

## கொரோனா 14 பேர் பலி

(கொழும்பு)

கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்ட மேலும் 14 பேர் ஒரே நாளில் 15

## அரிசி விலை தொடர்ந்து அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த சில நாட்களாக கட்டுப்பாட்டு விலை இல்லாமையினால் வர்த் 15

## மின்சார சபைக்கு எரிபொருளை வழங்கினால் வாகனங்களுக்கு விநியோகிக்க முடியாது

### எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவிப்பு



(கொழும்பு)

தேவையான அமெரிக்க டொலர்களை வழங்கினால் மாத்திரமே இனிமேல் இலங்கை மின்சார சபைக்கு எரிபொருள் வழங்கப்படும் என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில மின்சக்தி அமைச்சுக்கு தெரிவித்துள்ளார்.

மின்சார சபைக்கு 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலை வாய்ப்பு

புதிதாக ஆரம்பமாகவுள்ள Beauty parlour & fancy ஒன்றிற்கு வேலை ஆட்கள் தேவை.

- Beautician (அனுபவம் உள்ள பெண்கள்)
- கணனி ரைப்பிங் (பெண்கள்)
- விற்பனை பிரதிநிதி (பெண்கள்)

(9706)

தொடர்புகளுக்கு

**077 679 9286**


# யாழ். பல்கலையில் இன்று பொங்கல் விழா

(குப்பிழான்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாண வர்கள் நடாத்தும் மாபெரும் பொங் கல் விழா இன்று திங்கட்கிழமை (17.01. 2022) முற்பகல் 11 மணி முதல் யாழ் ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம் பெறவுள்ளது.

மேற்படி விழாவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

(ஞா-18)




105ஆவது பிறந்ததின நினைவு

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர்

**M.G. இராமச்சந்திரன்**

அவர்களுக்கு

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

கூறி நினைவு கூருகின்றோம்.

ப. விஜயகுமார்

இல. 27/1, மானிப்பாய் வீதி,

பொன்னப்பா லேன், யாழ்ப்பாணம்.

(9699)

**விசாகா/றோயல் A/L 2022 பரீட்சை**

வன்னி/ கிளி./ யாழ். மாவட்டம்

வீடு வரல்/ இரு மொழிகளிலும்

இரசாயனவியல் - சிங்கம்

**076 056 5786**

உயிரியல் - தினக்குரல் வித்யா

**077 665 5290**

(9636)

**அல்வாய் வேவிலந்தை**

**ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய நித்திய பூஜைக்கு**

# அந்தணக்குருக்கள் தேவை

ஆலயத்திற்கு நித்திய, நைமித்திய பூஜையும் குருத்துவ பணியும் செய்யக்கூடிய அந்தணக்குரு தேவை.

ஆலயத்திற்கு நித்திய உதவியாளரும் தேவை.

விருப்பமுடையோர் எதிர்வரும் 25.01.2022 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

ஆலய பரிபாலன சபையினரிடத்தில் தங்கள் வேதனங்கள் போன்றவற்றை கதைத்து தீர்மானிக்கலாம்.

**ஆலய பரிபாலன சபை**

**077 154 6842**

(C-3506)

**தரம் 5 புலமைப்பரிசில் - 2022**

**தரம் 4 புலமைப்பரிசில் - 2023**

**விசேட வகுப்புக்களும் மாதிரிப் பரீட்சைகளும்**

தைப்பூச நன்நாளில்

ஆரம்பம் : 18.01.2022 செவ்வாய் 3.30 மணி

நீங்கள் நன்கு அறிந்த யாழ். மாவட்ட பிரபல ஆசிரியர்

திரு. **குலசிங்கம் அமுதீசன்**

National Dip.in.Teaching Primary (Merit) - B.B.M.(R)

வெளியீடு - "அறிவுச் சுடர்" பிரதம ஆசிரியர்

- வாரத்தில் 5 நாட்கள் வகுப்பு
- ஞாயிறுதோறும் மாதிரிப் பரீட்சை

**புதிய நாவலர் கல்வி நிலையம்**

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

T.P. - 077 459 8440

(9700)

**அடிப்படை ஆரம்ப வகுப்பு**

தரம் 1 | தரம் 2 | தரம் 3

யாழ். மாவட்ட பிரபல ஆசிரியர்களினால் வழிநடத்தப்படுகின்றன.

**கல்வியாண்டு 2022க்கான புதிய வகுப்புக்கள்**

தைப்பூச நன்நாளில்

ஆரம்பம் : 18.01.2022

செவ்வாய் பி.ப. 3.30 மணி

- மாதாந்தப் பரீட்சை, தவணைப் பரீட்சை
- ஒவ்வொரு பிள்ளைக்கும் தனிப்பட்ட கவனிப்பு
- வாரத்தில் 5 நாட்கள் வகுப்பு

(9701)

மேலதிக விபரங்களுக்கு

**புதிய நாவலர் கல்வி நிலையம்**

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**T.P. - 077 459 8440**


# மரண அறிவித்தல்

தோற்றம் 21 – 01 – 1941



மறைவு 15 – 01 – 2022

## திரு. முருகையா நகுலேஸ்வரன்

(ஓய்வுபெற்ற ஆசிரியர் – கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயம்)

கீரிமலை வீதி, மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு. முருகையா நகுலேஸ்வரன் அவர்கள் கடந்த 15.01.2022 (சனிக்கிழமை) அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகையா - அன்னம்மா தம்பதியரின் அன்புப் புத்திரனும் ரஞ்சினி (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும் பிரதாபனின் அன்புத் தந்தையும் கிருபாகரன், மகேஸ்வரன், கெங்காதரன், விஜயலக்சுமி, பரந்தாமன், அனந்தலக்சுமி, ராஜலக்சுமி, ராஜராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் விமலராணி, புஷ்பவதி, தேவிகாராணி, காலஞ்சென்ற சிவானந்தன், தனபாலினி, மனோகரன், காலஞ்சென்ற யோகநாதன் ஆகியோரின் மைத்துனரும் அனுராதா, உமாசுதன் ஆகியோரின் சிறிய தந்தையும் துவாரகன், மாயவன், பிரசன்னா, பைரவி ஆகியோரின் பெரிய தந்தையும் மேனகா, கார்த்திகேயன், துஷியந்தி, அமலன், ரஜீகன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.01.2022) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மாவிட்டபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கீரிமலை வீதி, மாவிட்டபுரம். (9696) 077 922 5648 தகவல்: குடும்பத்தினர்

# 9ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் 60ஆவது பிறந்த தினமும்

பிறப்பு 20 . 01 . 1962



இறப்பு 26 . 01 . 2013


## அமரர் செல்வமலர் சற்குணராசா

கணப்பொழுதும் எண்ணவில்லை எம் கலங்கரை விளக்கே!
நீங்கள் இமைப்பொழுதில் எம்மை விட்டகல்வீரென
அன்புடனும் பண்புடனும் பாசத்துடனும் வழிநடத்திய
எங்கள் அன்புத் தெய்வமே அம்மா!
நீங்கள் இல்லாத உலகம் என்றும் இருள் மயமானது
எங்கே காண்போம் உங்கள் மலர்ந்த முகத்தை
உங்கள் பிரிவைத் தாங்குமா எங்கள் இதயம் ...

…ம் ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (9704) குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழ் கலாசார விழுமியங்களை பிரதிபலிக்கும் யாழ். மாநகர சபையின் முத்தமிழ் விழா











யாழ். மாநகர சபையின் ஏற்பாட்டில் முதன்முறையாக முத்தமிழ் விழா நேற்று நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் தமிழ் கலாசார விழுமியங்களை பிரதி பலிக்கும் வகையில் மேள தாள வாத்தியங்கள் முழங்க, பொய்க்கால் குதிரையாட்டம், மயிலாட்டம், கோலாட்டம் என்பனவற்றுடன் விருந்தினர் கள் யாழ். மாநகர சபை முன்றலில் இருந்து நிகழ்வு மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

இந்நிகழ்வில் யாழ் மாநகர சபையால் இயல்துறைக்கான அரச கேசரி விருது கவிஞர்.சோ.பத்மநாதனுக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

(படங்கள்: சிவசாந்தன், ரவிசாந்)

## எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள ஜனாதிபதியின் கொள்கை உரை

# இந்தியாவின் நிலைப்பாட்டை பூர்த்தி செய்யுமா?

(கொழும்பு)

**இந்தியாவின் ஆசிர்வாதத்துடன் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பான விடயங்கள் ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையில் உள்ளடங்கியிருக்கும் என்று கொழும்பின் ஊடகம் ஒன்று கருத்து வெளியிட்டுள்ளது.**

ஏற்கனவே இலங்கை மற்றும் இந்திய தலைவர்கள் ஏற்றுக்கொண்ட 13ஆவது திருத்தம் இலங்கையின் யாப்பில் உள்ளடங்கியுள்ளது.

பாராளுமன்றத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாளை செவ்வாய்க்கிழமை ஆற்றவுள்ள அரசாங்கத்தின் கொள்கை விளக்க உரையில் அடங்கப்போகும் விடயங்கள் குறித்து பலரும் தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

இலங்கையின் தமிழ் பேசும் கட்சிகள் குறிப்பாக மலையக மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பன உடன்படாதபோதும், ஏனைய கட்சிகள் இந்த 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த இந்தியாவின் ஆதரவைக் கோரியுள்ளன.

இந்த ஏற்பாடுகளுக்கு இந்தியாவின் பின்புலம் இருக்கலாம் என்று ஆங்கில செய்தித்தாள் ஒன்று கருத்தை வெளியிட்டுள்ளது.

மறுபுறத்தில் பிந்திய நிலையில் இலங்கையை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்கும் வகையில் உதவித் திட்டங்களை இந்தியா அறிவித்துள்ளது.

அத்துடன் இலங்கைக்கு உதவும் விடயத்தில் தமிழகத்தின் எதிர்ப்புகளை சந்திக்கும் இந்திய பிரதமர் மோடியின் பாரதீய ஜனதா கட்சி தமிழகத்தில் செல்வாக்கை பெருக்கிக்கொள்ள, இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்னெடுக்க வேண்டிய அவசியம் உள்ளது.

எனவே நல்லிணக்க விடயங்களை இலங்கை ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையில் எதிர்பார்க்கலாம் என குறித்த ஆங்கில செய்தித்தாள் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தநிலையில், நல்லிணக்க விடயங்கள் முன்னெடுக்கப்படவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

எனினும் நாட்டில் மிக விரைவாக தீர்க்கப்பட வேண்டிய எரிபொருள் விநியோகம், மின்சார விநியோகம் போன்ற விடயங்களை தீர்க்கும் வகையில் ஜனாதிபதியின் உரை அமையவேண்டும் என்று தாம் எதிர்பார்ப்பதாக ஆளும் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்சன யாப்பாவும் கருத்து வெளியிட்டார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்னியின் பெரும் சமர்

# கிளிநொச்சி - புதுக்குடியிருப்பு கல்லூரிகளின் துடுப்பாட்டத் தொடர் நேற்று ஆரம்பம்





வன்னியின் பெரும்போர் என்று அழைக்கப்படும் கிளிநொச்சி மகா வித்தியாலய அணிக்கும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்குமிடையிலான நட்புக்கிண்ண கிரிக்கெட் தொடர் கோலாகலமாக நேற்று ஆரம்பமானது.

இரு பாடசாலைக்குமிடையிலான துடுப்பாட்ட தொடர் நேற்று ஆரம்பமாகிய நிலையில் இன்று கிளிநொச்சி மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

2007 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட குறித்த முதல் தொடர் சமநிலையில் நிறைவடைந்தது. இதேவைளை 2008 ஆம் ஆண்டு இடம்பெற்ற குறித்த போட்டியில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றது.

யுத்த சூழ்நிலை காரணமாக போட்டிகள் நடைபெறாத நிலையில் 2013 ஆம் ஆண்டு மீண்டும் ஆரம்பமாகி தொடர்ந்து போட்டிகள் நடைபெற்ற போதும் கொவிட் காரணமாக 2020 ஆம் ஆண்டு நடைபெறவில்லை.

குறித்த போட்டி 2021 ஆம் ஆண்டுக்கான 10 ஆவது போட்டியாக நடைபெறுகிறது. இதுவரை நடைபெற்ற 10 போட்டிகளில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணி மூன்று போட்டிகளில் வெற்றி பெற்றுள்ள அதேவேளை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி ஒரு போட்டியில் வெற்றி பெற்றுள்ளது. ஐந்து போட்டிகள் சமநிலையில் நிறைவடைந்திருக்கிறது. 10 ஆவது வன்னியின் பெரும் சமர் தொடரில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணிக்கு யோ.பிரவிந்தன், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணிக்கு தே.உதயநேசன் ஆகியோர் தலைமை தாங்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (6-100-316)


# மரண அறிவித்தல்



## திருமதி செல்வராணி தியாகராஜா

**பிறப்பு : 1949.01.10 இறப்பு : 2022.01.16**

மானிப்பாய் சோதி வேம்படியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் தில்லையம்பதியை வசிப்பிடமாவும் கொண்ட திருமதி செல்வராணி தியாகராஜா நேற்று (16.01.2022) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - தங்கச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னன் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் தியாகராஜாவின் அன்பு மனைவியும் கெங்கேஸ்வரன் (அண்ணா, முன்னாள் ப.நோ.கூ. சங்க உத்தியோகத்தர்), ஞானேஸ்வரன் (விஜி), சிவதர்சினி, விக்கினேஸ்வரன் (கமநல அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்), ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ராஜினி (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், தென்மராட்சி), சுதாயினி (மீசாலை), விவேகானந்தன் (மாதகல்), ராதிகா (ஆசிரியை - யாழ்/ உரும்பிராய் இந்துக் கல்லூரி), வனிதா (தெல்லிப்பளை) ஆகியோரின் அன்பு மாமியாரும் மதுசங்கர் (லண்டன்), மதுராங்கி, மேதவன், பவிசங்கர், சானுஜன், தரணி, ஆர்த்திகன், கவியாரணி, சாயிசங்கர், சாயித்தியா, சாயினி, குபேதிகா, நிவேதிகா ஆகியோரின் அன்பு பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.01.2022) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று புகழுடல் தகனக் கிரியைகளுக்காக மு.ப 11.00 மணிக்கு கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-3561)

தில்லையம்பதி, கோண்டாவில்.

077 316 1399 (மகன்)

தகவல் :- குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினமும் 4 மணிநேர மின்வெட்டு!

## மின்சார சபை பொறியியலாளர் சங்கம் எச்சரிக்கை

**(கொழும்பு) இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறைந்து வருவதால் பாரிய மின்வெட்டை அமுல் செய்ய வேண்டி ஏற்படும் என இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.**

நாளாந்தம் நான்கு மணித்தியாலங்கள் மின்வெட்டுக்கு தயாராக இருக்குமாறு மக்களை கேட்டுக்கொள்வதாக இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கத்தின் தலைவர் சௌமிய குமாரவாடு நேற்று தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபையிடம் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு போதுமான 3,000 மெற்றிக் தொன் டீசல் மட்டுமே தற்போது கையிருப்பில் உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதன் பிரகாரம் மூன்று நாட்களுக்குப் பின்னர் மின் நுகர்வைக் கட்டுப்படுத்த மின்வெட்டை அமுல்செய்ய வேண்டி ஏற்படும்.

நீர்த்தேக்கங்களில் தற்போதுள்ள நீர் முன்னுரிமை அடிப்படையில் விவசாயம், குடிநீர் மற்றும் சுற்றுச்சூழல் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுவதால் நீர் மின் உற்பத்தியும் குறைந்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட மின் உற்பத்தி நிலையங்களை நிர்மாணிப்பதில் ஏற்படும் தாமதம் மற்றும் புதிய மின் உற்பத்தித் திட்டங்கள் இரத்துச் செய்யப்படுதல் போன்ற காரணிகளால் மின்தடை ஏற்படும் பட்சத்தில் மின்சாரத்தை வழங்கக்கூடிய மாற்று வழிகள் நாட்டில் இல்லை எனவும் அவர் மேலும் 'குறிப்பிட்டார். (நி)

## 160 ஒமிக்ரோன் தொற்றாளர்களின் அடையாளம் சுகாதார அமைச்சின் குறைபாடுகளை வெளிப்படுத்தி உள்ளது

### ரவிகுமுதேஷ் குற்றச்சாட்டு



(கொழும்பு)

நாட்டில் புதிதாக 160 ஒமிக்ரோன் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை சுகாதார அமைச்சின் குறைபாடுகளை வெளிப்படுத்தியுள்ளது என சுகாதார தொழில்சார் துறையினர் சங்கத்தின் தலைவர் ரவிகுமுதேஷ் தெரிவித்தார்.

வெளிநாட்டு பயணிகளிற்கு சோதனைகளை மேற்கொள்வது நாட்டிற்கு சுமையாக மாறியுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு வந்த பலர் பாதிக்கப்பட்டிருப்பது அவர்களது நாட்டிலிருந்து அவர்கள் வெளியேறும் போதே தெரிய வருகின்றது.

இதன் மூலம் ஒமிக்ரோனால் பாதிக்கப்பட்ட பலர் நாட்டிற்குள் நுழைகின்றனர் என்ற முடிவிற்கு வரமுடியும்.

இதனை தடுத்து நிறுத்தியிருக்க முடியும் என்றும் ஆனால் அரசாங்கம் நாட்டிற்குள் நுழைபவர்களை சோதனையிடுவதை நிறுத்தியுள்ளது.

இதனால் எதிர்காலத்தில் மிகவும் கடினமான தனிமைப்படுத்தல் நடவடிக்கைளை முன்னெடுக்க வேண்டி வரும் எனவும் அவர் தெரிவித்தார். (நி)

## எண்ணெய் வளமுள்ள இடங்களை அடையாளம் காண நவீன தொழில்நுட்பம்

(கொழும்பு)

நாட்டில் எண்ணெய் வளமுள்ள இடங்களை அடையாளம் காண்பதற்கு நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான வேலைத் திட்டத்தைத் புவிச்சரிதவியல் ஆய்வு சுரங்கப் பணியகம் ஆரம்பித்துள்ளது.

இந்தத் திட்டத்திற்குத் தேவையான உபகரணங்களை 35 இலட்சம் ரூபாய் செலவில் பிரான்சிலிருந்து கொள்வனவு செய்ய புவிச்சரிதவியல் ஆய்வு சுரங்கப் பணியகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. (நி)

# நாளைய பாராளுமன்ற அமர்வு ஆளும் கட்சிக்கு சவாலானதாக அமையும்

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாம் கூட்டத்தொடர் எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட உள்ளது.

குறிப்பாக ஆளும் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் பலர் சுதந்திர கட்சிக்கு ஆதரவு வழங்கி வெளியேறுவார்கள் என்றும் கூறப்படுகிறது.

இதனை உறுதி செய்யும் முகமாக சுதந்திரக் கட்சியின் மத்தியகுழு உறுப்பினர் சிரேஷ்ட உப தலைவருமான பேராசிரியர் ரோஹண லக்ஷமன் பியதாசவிடம் வினவிய போது,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் பொதுஜன பெரமுனவிற்கும் இடையிலான ஒப்பந்தம் இன்று முற்றுமுழுவதுமாக மீறப்பட்டுள்ளது. எனவே பொறுமையிழந்த நிலையில் உள்ளோம்.

பல முக்கிய தீர்மானங்களை எதிர்வரும் நாட்களில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவிப்பார் என்றும் பேராசிரியர் ரோஹண லக்ஷமன் பியதாச குறிப்பிட்டார்.

இந்நிலையில் ஆளும் கூட்டணியிலிருந்து சுதந்திரக்கட்சி விலகும் தீர்மானம் எடுக்கப்பட்டால் சுதந்திர கட்சியின் 14 உறுப்பினர்கள் மாத்திரம் அரசாங்கத்தை விட்டு வெளியேறப் போவதில்லை.

மாறாக சுமார் 16 பேர் வரை சுதந்திரக் கட்சியுடன் இணைந்து வெளியேறுவார்கள் என்று அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட உள்ள புதிய பாராளுமன்ற அமர்வு ஆளும் கட்சிக்கு சவால் மிக்கதாகவே அமையும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

## இராசிபலன்

**17.01.2022**
**தை 04 , திங்கட்கிழமை**
**பூரணை பின்னிரவு 5.54 மணிவரை**

**புனர்பூசம் பின்னிரவு 5.22 மணிவரை**
**சுபநேரம் 12.35-2.05 மணிவரை**
**இராகுகாலம் 8.05-9.35 மணிவரை**

**சந்திராஷ்டமம்: கேட்டை**
**பூரணை விரதம் அமிர்தசித்தம்**

**வளவன்**

**மேஷம்:** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், போசன நன்மையுண்டு.

**ரிஷபம்:** வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்:** எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள்.

**கடகம்:** பணப்புழக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், அன்றாடப் பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள்.

**சிம்மம்:** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

**கன்னி:** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்க்ள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், நிலையான வருமானத்திற்கு வழி கிடைக்கும், திறமைகள் வெளிப்படும் நாள்.

**துலாம்:** விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், புதிய திட்டங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, உடல் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், பிரயாண பயமுண்டு.

**தனுசு:** அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**மகரம்:** கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள், சுவாரஷ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு.

**கும்பம்:** பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் நிலையுண்டு.

**மீனம்:** பேச்சில் கனிவு பிறக்கும், பயணங்களால் பலனுண்டு, உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், மனிதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும்.

**உன் மனதைக் கட்டுப்படுத்துவதே உண்மையான தவம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொரோனா இடர்காலத்தில் உன்னத பணியாற்றிய சுத்திகரிப்பு ஊழியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு வடமாகாண மருத்துவ மன்றத்தின் ஏற்பாட்டில் நலன்விரும்பிகளின் அனுசரணையுடன் நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்.போதனா மருத்துவ மனையில் இடம்பெற்றது. (படம்- ரவிசாந்)

# நெதர்லாந்தில் இருந்து யாழ்.வாசிக்கு வந்த போதைப் பொருள் 'பார்சல்'

(கொழும்பு)

நெதர்லாந்திலிருந்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவருக்கு அனுப்பப்பட்ட 5 கிலோ எடையுடைய பொதியொன்றிலிருந்து சுமார் 26 மில்லியன் ரூபாய் பெறுமதிமிக்க போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன.

அந்தப் பொதியைப் பெற்றுக்கொள்ள கொழும்பு மத்திய அஞ்சல் பரிமாற்று மத்திய நிலையத்துக்கு நேற்று முன்தினம் வருகை தந்த நபர் ஒருவரையும் சுங்கப் பிரிவின் போதைப் பொருள் கட்டுப்பாட்டு பிரிவினர் கைது செய்ததாக சுங்க ஊடகப் பேச்சாளர், பிரதி சுங்கப் பணிப்பாளர் (சட்டம்) சுதத்த சில்வா தெரிவித்தார்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட நபரும், போதை மாத்திரைகளும் பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பணியகத்திடம் கையளிக்கப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகள் அந்த பணியகம் ஊடாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த பொதியில் கட்டில் விரிப்புக்கள் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் அடங்கியுள்ளதாக சுங்கப் பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டிருந்த நிலைல்யில், பொதியின் கார்ட் போர்ட் பெட்டிகளுக்குள் மிக சூட்சுமமாக இந்த போதை மாத்திரைகள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக சுங்கப் பிரிவினர் தெரிவித்தனர்.

மெதம்பட்டமைன் அடங்கிய எக்சடசி எனும் போதை மாத்திரையே இதன்போது மீட்கப்பட்டதாகவும் அவற்றின் நிறை 1,600 கிராம் எனவும் சுங்கப் பிரிவினர் தெரிவித்தனர். (நி)

# வீதி விளக்கு பொருத்தல்

(அராலி)

அராலி மேற்கு மருத்துவமனை வீதி மற்றும் அராலி மத்தி பகுதி வீதிகளுக்கு வீதி விளக்குகள் பொருத்தி வைக்கப்பட்டன.

வலி.மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் கந்தையா இலங்கேஷ்வரன் மற்றும் பொதுமக்களின் நிதிப் பங்களிப்பில் வலி.மேற்கு பிரதேச சபையின் ஊழியர்களால் குறித்த வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்தி வைக்கப்பட்டன. (5-104)

# சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கியப் பேரவையின் உழவர் விழாவும் தாயகம் சஞ்சிகையின் பாரதி நினைவு நூற்றாண்டுச் சிறப்பிதழ் வெளியீடும் இன்று 17 திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவரும், தாயகம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியருமான எழுத்தாளர் க.தணிகாசலம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் "தமிழர் பாரம்பரிய உணவுப் பண்பாடு" என்ற தலைப்பிலான விசேட உரையினை ஆசிரியர் கை.துசியந்தனும் தாயகம் சஞ்சிகையின் பாரதி நினைவு நூற்றாண்டுச் சிறப்பிதழுக்கான அறிமுக உரையைக் கலாசார உத்தியோகத்தர் த.அமலதாஸ்ும் ஆற்றவுள்ளனர்.

சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (5-6-18)

# ஓட்டுமடத்தில் வாள்களுடன் வீடு புகுந்து இளைஞர் குழு அட்டகாசம்

(குப்பிழான்)

யாழ்.ஓட்டுமடம் இறால் வாடி வீதியில் அமைந்துள்ள வீடொன்றுக்குள் தைப்பொங்கல் தினமான கடந்த வெள்ளிக்கிழமை இரவு வாள்களுடன் புகுந்த 15 பேர் கொண்ட இளைஞர் குழு வீட்டில் கடும் சேதங்களை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் குறித்த குழுவினர் வீட்டிலிருந்த இரண்டு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் பணத்தையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஓட்டுமடம் அராலி வீதியில் மது போதையில் நின்ற இளைஞர்கள் வீதியால் செல்பவர்களுடனும் தகராறில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் மேற்படி வீட்டின் உரிமையாளர் தனது குடும்பத்தினருடன் வெளியில் சென்று வீடு திரும்பிய போது அவர்களின் வாகனத்தை வழிமறித்தும் குறித்த குழு தகராறில் ஈடுபட்டதுடன் வாகனத்தின் மீதும் குடும்பஸ்தர் மீதும் தாக்குதல் நடத்தியது.

இதனைத் தடுக்க முற்பட்ட அவரது மனைவியும் தாக்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது அந்தப் பகுதியால் பொலிஸார் வந்த நிலையில் அவர்களைக் கண்டதும் தகராறில் ஈடுபட்ட குழு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது. இதன்போது குறித்த குழுவினர் கைவிட்டுச் சென்ற மோட்டார் சைக்கிளொன்று யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

பொலிஸாரின் அறிவுறுத்தலுக்கு அமைய தாக்குதலுக்குள்ளான குடும்பஸ்தர் யாழ்ப்பாணம் பொலிஸில் முறைப்பாடு செய்தார்.

இந்நிலையில் வாள்களுடன் சென்ற 15 பேர் கொண்ட குழு இரண்டு இலட்சம் ரூபாய் பெறு மதியான பொருட்களை சேதப்படுத்தியதுடன், இரண்டு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் பணத்தையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.(5-6-18)

# கட்டைக் காட்டில் பட்டப் போட்டி



(குப்பிழான்)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டுப் பகுதியில் முதல் தடவையாகப் பட்டப் போட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை நடத்தப்பட்டது.

வடமராட்சி கிழக்கு பிரதேசத்துக்கு உட்பட்ட, பிரதேசத்திற்கு வெளியே என இரு பிரிவுகளாக மேற்படி போட்டிகள் இடம்பெற்றன. (5-6-18-33-64)



வடமராட்சி கிழக்கு கொடுக்குளாய் அபாய வெளியேற்றப் பாதையின் பாலம் மீள் நிர்மாணம் செய்யப்பட்டு மக்கள் பாவனைக்காக கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் திறந்து வைக்கப்பட்டது.

(படம்-நெடுங்கீரன்)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு கண்டாவளை கோனக்குளம் கற்பகவிநாயகர் தேவஸ்தான பிரதம குருக்கள் சாமஸ்ரீ தேசமாணி சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீஸ்காந்தராசக் குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறும். (5-6)



நூற்றாண்டு வரலாற்றைக் கொண்ட நீர்வேலி செல்லக் கதிர்காமம் கோயிலின் பட்டிப்பொங்கலும் பசுக்கள் மற்றும் காளைகளைக் கௌரவிக்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் மாலை சிறப்புற நடைபெற்றன. பிரம்மஸ்ரீ கு.தியாகராஜா குருக்களின் தலைமையில் இடம்பெற்ற இப்பட்டிப் பொங்கலில் வலி.கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் மற்றும் வட்டார உறுப்பினர்கள், கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள், கால்நடைகளை வளர்ப்போர் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்ச் மாதம் உச்சம் தொடும் நெருக்கடிகள் அதுவே அரசியலின் திசையை தீர்மானிக்கும்!

## எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில பகிரங்கம்



(கொழும்பு)

**எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் இலங்கையில் ஐந்து பாரிய நெருக்கடிகள் உருவாகும் எனவும் அதுவே இலங்கையின் அரசியலை தீர்மானிக்கும் எனவும் எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.**

தற்போது இவ்விவகாரம் குறித்து வெளிப்படையாகப் பேசாமல் உள்ளகப் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு வருவதாகவும், உள்ளகப் பேச்சு வார்த்தையில் தேவையான முடிவுகள் கிடைக்காவிட்டால் வெளிப்படையாகப் பேசத் தயார் என்றும் அவர் தெரிவித்தார்.

"மக்களில் சிலர் தாங்கள் தற்போது நெருக்கடியில் இருப்பதாக நினைக்கிறார்கள், ஆனால் அது உண்மையல்ல, மார்ச் மாதத்திலேயே நெருக்கடி உச்சத்தை எட்டும்," என்றும் இந்த நெருக்கடிதான் அரசியலின் திசையை தீர்மானிக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சியுடனான கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். (நி)

## எரிவாயு சிலிண்டர்களுக்கான தட்டுப்பாடு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது

### லிற்றோ நிறுவனம் அறிவிப்பு

(கொழும்பு)

நீண்டகாலமாக நிலவி வந்த எரிவாயு சிலிண்டர்களுக்கான தட்டுப்பாடு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாக லிற்றோ காஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் தற்போது விநியோகத்திற்கு தேவையான எரிவாயு சிலிண்டர்கள் உள்ளன.

இதன் காரணமாக மக்கள் வரிசைகளில் காத்திருக்கத் தேவையில்லை.

இதேவேளை, சிறிய அளவிலான வர்த்தக நிலையங்களுக்கும் அடுத்த வாரத்தில் இருந்து தட்டுப்பாடின்றி எரிவாயு விநியோகிக்கப்படும் என்று நிறுவனம் அறிவித்திருக்கிறது. (நி)



கண்டி தலதா மாளிகைக்கு நேற்று விஜயம் செய்த பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வழிபாட்டில் ஈடுபட்டு ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டுள்ளார்.

## சு.க. கலந்து கொள்ளாததால் ஆளும்கட்சி கூட்டம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

இந்த வாரம் நடைபெறவிருந்த ஆளும் கட்சி தலைவர்களின் கூட்டத்தில் தமது கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களால் கலந்து கொள்ள முடியாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்ததை அடுத்து, கட்சித் தலைவர்களின் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் ஆளும் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களின் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் அநுராதபுரத்தில் நடைபெறும் விசேட சமய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள உள்ளதால், கூட்டணிக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாது என ஒருங்கிணைப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தற்போது அரசாங்கம் தொடர்பாக முன்வைத்து வரும் விமர்சனங்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் முக்கியமாக கலந்துரையாடப்பட இருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)

## ஒரு கோடி டொலர் இலாபம் ஈட்டிய ஸ்ரீலங்கன் விமானசேவை

(கொழும்பு)

தொற்று நோயின் பின்னர் ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் கடந்த டிசெம்பர் மாதம் 10 மில்லியன் டொலர் இலாபத்தை ஈட்டியுள்ளது.

விமான சேவையின் பயணிகள் போக்குவரத்து பிரிவு நட்டத்தில் இயங்கினாலும் நிறுவனத்தில் இலாபத்தை ஈட்டிய ஒரே பிரிவு இது என ஸ்ரீ லங்கன் விமான சேவையின் சுதந்திர ஊழியர் சங்கத்தின் தலைவர் ஜனத விஜயபத்திரன தெரிவித்தார். (நி)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1976 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 3<br>கி.பா: சூரி10 செவ் 12இல்<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: A/L வியாபாரம்<br>தொ.இ: B/6628 | பிறப்பு: 1978 இந்து நட்சத்திரம்: பூரம் 1<br>கி.பா:38 ½ சூரி 11 செவ் 5இல்<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:அரச,தனியார் உத்தியோகம்<br>தொ.இ:G/6406 |
| பிறப்பு:1983 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா:43 சூரி 2 செவ்1 இல்<br>உயரம்:5'10"<br>தகைமை/தொழில்:A/L சொந்தத்தொழில்<br>தொ.இ: B/6652 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை 1<br>கி.பா:-14 ¼ சூரி 9செவ் 10இல்<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்: Bachelor of Accounting ( Finace) (தனியார்) Australia<br>எதிர்பார்ப்பு:கொழும்பு அல்லது வெளிநாடு<br>தொ.இ:G/6474 |
| பிறப்பு:1981 இந்து<br>நட்சத்திரம்:மூலம்<br>கி.பா:-செவ் 9 சூரி 8இல்<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்:A/L தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு:-அரசதொழில்<br>தொ.இ: B/6656 | பிறப்பு:1991 இந்து<br>நட்சத்திரம்:அத்தம்2<br>கி.பா: சூரி 11 செவ் 2இல்<br>உயரம்:4'5"<br>தகைமை/தொழில்:B.Sc பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ:G/6486 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா:35 சூரி.செவ்4இல்<br>தகைமை/தொழில்:A/L தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு:அரசதொழில்<br>தொ.இ: B/6657 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 10 சூரி 5 செவ் 3இல்<br>உயரம்:4'9"<br>தகைமை/தொழில்:வங்கியாளர்<br>எதிர்பார்ப்பு:அரச தொழில்<br>தொ.இ:G/6513 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொ[illegible]
சேவைக் கட்டணமாக ரூபா 1500 அறவிடப்படும்.



## கம்சப்பிரியா இசைக் கல்லூரி

இல.30, கிருஸ்ணபிள்ளை வீதி, ஈச்சமோட்டை யாழ்ப்பாணம்.

### தைப்பூச நாள் வகுப்பு

தைப்பூச நாள் வகுப்பு நாளை 18.01.2022 மாலை 4 மணியிலிருந்து 6 மணிவரை

கற்பிக்கப்படும் பாடங்கள்

- வயலின்
- புல்லாங்குழல்
- கிட்டார்
- ஓர்கன்
- வீணை
- ஹார்மோனியம்
- வாய்ப்பாட்டு (கர்நாடக சங்கீதம்)

பழைய, புதிய மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

ஆசிரியர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா தொற்று நோய் விரைவில் முடிவுக்கு வரும்

# அமெரிக்க அறிவியல் நிபுணர் உறுதி

(வோஷிங்டன்)

**கொரோனாத் தொற்று பரவலை கட்டுப்படுத்த தடுப்பூசி பூஸ்டர் டோஸ்களை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் வோஷிங்டன் நோய் எதிர்ப்பு மற்றும் நுண்ணுயிரியல் துறை அறிவியல் இயக்குநர் மருத்துவர் குதுப் மஹ்மூத் தெரிவித்தார்.**

இந்தியாவில் கொரோனா தடுப்பூசி டோஸ் அளவு 156 கோடியை தாண்டியுள்ளது. இது குறித்து வோஷிங்டன் நோய் எதிர்ப்பு மற்றும் நுண்ணுயிரியல் துறை அறிவியல் இயக்குநர் மருத்துவர் குதுப் மஹ்மூத். ஏ.என்.ஐ. செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளதாவது,

இது இந்தியாவுக்கு மிகப் பெரிய சாதனை. இந்திய தடுப்பூசிகள் உலக அளவில் பயன்படுத்தப்படுகின்றன. இந்தியாவில் ஒரு வருடத்திற்குள் 60 சதவீத தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

கொரோனா ஒரு தனித்தன்மை வாய்ந்த வைரஸ் ஆகும். ஏனெனில் இது அதிக மாறுதல்களைக் கொண்டுள்ளது.

கொரோனா தொற்று நோய் விரைவில் முடிவுக்கு வரும். இந்த ஆண்டில் தொற்று நோயிலிருந்து மிக விரைவில் நாம் வெளிவருவோம் என்று நம்புகிறேன். அதன் பரவலைக் கட்டுப்படுத்த நாம் தடுப்பூசி. பூஸ்டர் டோஸ்களை எடுத்துக் கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

## பிலிப்பைன்ஸில்

## தடுப்பூசி செலுத்தாவிட்டால் வெளியே வர வேண்டாம்

### மீறினால் கைது செய்ய உத்தரவு

(மணிலா)

பிலிப்பைன்சில் கொரோனா தடுப்பூசியை செலுத்திக் கொள்ளாதவர்கள் வீட்டை விட்டு வெளியே வரவேண்டாம் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று அதிகரித்து வரும் நிலையில் வைரஸ் பரவலை கட்டுப்படுத்த அந்நாட்டு அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

அனைவரும் தடுப்பூசிகளைச் செலுத்திக் கொள்ள வேண்டும் என கோரிக்கை விதிக்கப்பட்டுள்ள அதே வேளை பொதுப் போக்குவரத்தை பயன்படுத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இதை மீறுபவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்று பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தடுப்பூசியை செலுத்திக் கொள்ளாதவர்கள் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது, இதை மீறுபவர்கள் கைது செய்யப்படுவார்கள் என பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தடுப்பூசி செலுத்தி கொள்ளாதவர்களின் விபரங்களைத் திரட்டும் நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி)

## டில்லியில் கடும் குளிர்

(டில்லி)

டில்லியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை முதல் கடும் குளிர் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை இல்லாத வகையில் வெப்பநிலை 6 புள்ளி 1 டிகிரி செல்சியசாக சரிந்துள்ளதால், கடும் குளிரில் மக்கள் அவதிப்பட்டனர்.

அத்தோடு, கடுமையான பனிமூட்டமும் காணப்பட்டதால், போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது. டில்லியின் அண்டை மாநில நகரங்களிலும் இதே போன்ற கடும் குளிர் நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

பனிமூட்டம் காரணமாக பல்வேறு தடங்களில் முக்கிய ரயில்கள் தாமதமாகியுள்ளன.


டில்லிக்கு வரும் ரயில்களும் பனிமூட்டம் காரணமாக ஆங்காங்கே நிறுத்தப்பட்டன.

ரயில்களில் வருவோரை வரவேற்க வந்தவர்களும் ரயிலில் செல்லும் பயணிகளும் ரயில் நிலையங்களில் நடுங்கும் குளிரில் மணிக்கணக்கில் காத்திருந்தனர் என்றும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி)

## கடலுக்கு அடியில் எரிமலை வெடிப்பு

## டொங்காவை தாக்கிய சுனாமி

### ஜப்பானிலும் சுனாமி எச்சரிக்கை



(அலோபி)

பசுபிக் நாடான டொங்கா இராச்சியத்தின் கடற்பகுதிக்கு அடியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை எரிமலை வெடித்தது. இதனால் ஜப்பானில் சுனாமி எச்சரிக்கைகள் மற்றும் வெளியேற்றல் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டதுடன், பல தென் பசுபிக் தீவுகளுக்கும் சுனாமி எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டன.

சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட காட்சிகள் கடலோர வீடுகளை சுனாமி அலைகள் தாக்கியதை காட்டியுள்ளது.


சுனாமி எச்சரிக்கை நீக்கப்படும் வரை மக்கள் கடற்கரை மற்றும் அதனை அண்மித்த பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று ஜப்பான் அதிகாரிகள் பொதுமக்களுக்கு வலியுறுத்தியுள்ளனர்.

அதேநேரம் டொங்காவின் தலைநகரமும் கடுமையான சுனாமி அலைகளின் தாக்குதலுக்கு முகங்கொடுத்தது. கடலோர சாலைகளில் அலைகள் பாய்ந்து, சொத்துக்களை வெள்ளத்தில் மூழ்கடித்தது.

நியூசிலாந்து மற்றும் ஜப்பானின் சில பகுதிகளிலிருந்து அமெரிக்கா மற்றும் கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவிற்கும் சுனாமி எச்சரிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதால் இந்த வெடிப்பு பசுபிக் முழுவதும் அதிர்வுகளை ஏற்படுத்தி உள்ளது. (நி)

### அமெரிக்காவின் பொருளாதார தடைக்கு பதிலடியாக

## ரயிலில் இருந்து ஏவுகணைகளை ஏவி பரிசோதனை செய்த வடகொரியா



(பியாங்யாங்)

அமெரிக்காவின் பொருளாதார தடையை பொருட்படுத்தாத வட கொரியா இம்மாதத்தில் மூன்றாவது முறையாக ஏவுகணைகளை சோதித்துள்ளது. இந்த முறை ரயிலில் இருந்து 2 ஏவுகணைகளை ஏவி சோதனையை நடத்தியுள்ளது. ஏவுகணை சோதனை நடத்தியதால் வடகொரியா மீது அமெரிக்கா பொருளாதார தடை விதித்த நிலையில், இதற்கு பதிலடியாக ரயிலில் இருந்து ஏவுகணைகளை ஏவி மற்றொரு சோதனையை வட கொரியா நடத்தியுள்ளது.

வடகொரியா கடும் பொருளாதார நெருக்கடியை சந்தித்து வருகிறது. பொருட்களின் விலைவாசி விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்துள்ளது.

எனினும், அந்நாட்டின் ஏவுகணை மோகம் தீர்ந்தபாடில்லை. கண்டம் விட்டு கண்டம் தாண்டி தாக்குதல் நடத்தும் பாலிஸ்டிக் ரக ஏவுகணைகளை அந்நாடு தொடர்ந்து சோதித்து வருகிறது.

வடகொரியாவின் ஏவுகணை சோதனை பிற நாடுகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் உள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதன் காரணமாக வட கொரியா மீது அமெரிக்கா பொருளாதார தடை விதித்துள்ளது. எனினும்,

அமெரிக்காவின் பொருளாதாரத் தடையை பொருட்படுத்தாத வடகொரியா இம்மாதத்தில் மூன்றாவது முறையாக ஏவுகணைகளை சோதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிப்பிரச்சினைகளுக்கு ஆறு மாதங்களில் தீர்வு

## அமைச்சர் டக்ளஸ் உறுதி

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படும் பல்வேறு வகையான காணிப் பிரச்சினைகளுக்கும் ஆறு மாதங்களுக்குள் தீர்வு காணப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதிபடத் தெரிவித்தார்.**

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் காணிப் பிரச்சினைகள் தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே, கடற்றொழில் அமைச்சரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவருமான டக்ளஸ் தேவானந்தா இந்த உறுதிமொழியை வழங்கினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொன்னகர், அக்கராயன், ஆனைவிழுந்தான், கண்ணகைபுரம், வன்னேரிக்குளம், ஜெயபுரம், பல்லவராயன்கட்டு, பண்டிவெட்டி, திக்குவயல், பள்ளிக்குடா, புன்னைநீராவி, கோவில்வயல், கண்டாவளை கல்மடுநகர் உள்ளிட்ட பகுதிகளிலுள்ள நூற்றுக்கணக்கான ஏக்கர் காணிகளில் சாத்தியமானவற்றை ஆறு மாதங்களுக்குள் விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாகவும், ஏனைய காணி தொடர்பான பிரச்சினைகளுக்கும் இதே காலப்பகுதிக்குள் தீர்வு காணப்படும் என்றும் கடற்றொழில் அமைச்சரும், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்தார். (நி-5-6)

# காட்டு யானைகளால் வாழ்வாதாரம் அழிப்பு

(தருமபுரம்)

இராமநாதபுரம் புதுக்காடு அழகாபுரி பகுதியில் காட்டு யானைகளால் பயிர்கள் அழிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், நேற்று முன்தினம் அதிகாலை கிராமத்துக்குள் புகுந்த 4 காட்டு யானைகள் அறுவடைக்குத் தயாராகவிருந்த மரவள்ளி மற்றும் வாழை, தென்னை என்பவற்றை முற்றாக அழித்துள்ளன.

இதனால் தமது வாழ்வாதாரம் முற்றாக அழிக்கப்பட்டு விட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அத்துடன் பல வருடங்களாக இடம்பெற்று வரும் யானைகளின் அட்டகாசம் தொடர்பாக கிராம உத்தியோகத்தர் மற்றும் கிளிநொச்சி பிரதேச செயலகம், வன ஜீவராசிகள் திணைக்களம் என்பனவற்றுக்குத் தெரிவித்தும் எந்தப் பயனும் கிடைக்கவில்லை.

எனவே சம்பந்தப் பட்ட அதிகாரிகள் முன்வந்து நடவடிக்கை எடுத்து தம்மைக் காப்பாற்ற வேண்டுமெனத் தெரிவித்தனர். (5-6-315-316)

## மாலைதீவு சபாநாயகர் இலங்கை வருகை



(கொழும்பு)

மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய சபாநாயகருமான மொஹமட் நஷீட் நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளார். ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் விமானத்தில் வருகை தந்த தூதுக்குழுவினர் நேற்று பிற்பகல் 12.45 மணியளவில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர். (நி)

## நிர்வாகத் தெரிவு

(குருமன்காடு)

வவுனியா மாவட்ட உதைபந்தாட்ட சங்கத்தின் பொதுக் கூட்டமும், நிர்வாகத் தெரிவும் தலைவர் ஏ.நாகராஜன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதில் தலைவராக ஏ.நாகராஜனும், செயலாளராக எஸ். சௌமியனும் பொருளாளராக ஏ.ஆர்.எம்.லரீப்பும் உப தலைவர்களாக எஸ். எம்.ஹாமீமும், உபசெயலாளராக எம். சுகந்தனும் உப பொருளாளராக ஜி.பிரசாந்தும் தெரிவு செய்யப்பட்டனர். (5-6-250)

# ஆதிக்கம் செலுத்தும் மாறுபாடாக மாறி வரும் ஒமிக்ரோன் திரிபு

## சுகாதார அதிகாரிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் புதிதாக 160 ஒமிக்ரோன் நோயாளர்கள் கண்டறியப்பட்டதை அடுத்து, டெல்டா மாறுபாட்டைவிட இலங்கையில் ஆதிக்கம் செலுத்தும் மாறுபாடாக ஒமிக்ரோன் தொற்று மாறி வருவதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

BA.1, BA.2 மற்றும் BA.3 ஆகிய ஒமிக்ரோன் இன் மூன்று துணைப் பரம்பரைகள் உலகளவில் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவற்றில் இரண்டு நாட்டில் கண்டறியப்பட்டுள்ளதாகவும் ஸ்ரீஜயவர்த்தனபுரவின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவத் துறையின் பணிப்பாளர் மருத்துவர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.

மேலும் கொழும்பு, காலி, மாத்தறை, கண்டி, கம்பஹா மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இரு[illegible] அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி)



கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் 102 ஆவது ஆண்டினை முன்னிட்டு இரணைமடு கமக்கார அமைப்புக்களின் சம்மேளனம் மற்றும் வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இணைந்து 102 பானைகளில் பொங்கல் விழா நேற்று கனகாம்பிகை அம்மன் ஆலய முன்றலில் நடைபெற்றது.
(படம்: தேவானந்தன், யதுபாஸ்கரன்)

# 48 ஆயிரத்து 299 குடும்பங்கள் இதுவரை குடியேற்றம்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை 48 ஆயிரத்து 299 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 47 ஆயிரத்து 213 பேர் இதுவரை குடியேறி இருப்பதாக மாவட்ட செயலக புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தின் பின்னரான மீள்குடியமர்வையடுத்து இதுவரை கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 48 ஆயிரத்து 213 பேர் குடியேறியுள்ளனர்.

அதாவது கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப் பள்ளி, பூநகரி ஆகிய நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் உள்ள 95 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் சுமார் 48 ஆயிரத்து 299 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 48 ஆயிரத்து 213 பேர் இதுவரை மீள்குடியேறி உள்ளதாக மாவட்ட செயலக புள்ளி விபரத்தில் தெரி விக்கப்பட்டுள்ளது.

மீள்குடியேறிய குடும்பங்களுக்கான வீட்டுத் திட்டங்கள் பல்வேறு நிதித் திட்டங்கள் ஊடாக வழங்கப்பட்டுள்ளதுடன் மின்சார வசதிகள், வாழ்வாதார உதவிகளுடன் உட்கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன என்றும் மாவட்ட செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.(5-6-315)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 420 | 400 | 400 |
| உருளைக்கிழங்கு | 150 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 600 | 500 | 700 |
| தக்காளி | 170 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 50 |
| கோவா | 250 | 320 | 300 |
| கரட் | 440 | 480 | 500 |
| பூசணி | 100 | 60 | 120 |
| புடோல் | 300 | 240 | 300 |
| வாழைக்காய் | 70 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 160 | 400 |
| பெரிய வெங்காயம் | 190 | 160 | 240 |
| பாகற்காய் | 300 | 300 | 400 |
| வெண்டிக்காய் | 240 | 150 | 250 |
| கருணைக் கிழங்கு | 100 | 90 | 120 |
| பயற்றங்காய் | 550 | 350 | 400 |
| லீக்ஸ் | 260 | 300 | 350 |
| பீற்றூட் | 300 | -- | 400 |
| கறிமிளகாய் | 500 | 500 | 600 |
| முருங்கைக்காய் | -- | -- | 1000 |
| போஞ்சி | 260 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | -- | 360 |
| கீரை - 1 பிடி | 70 | 150 | 100 |
| தேசிக்காய் | 150 | 150 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60-80 |
| இராசவள்ளி | 260 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 350 | 450 | 500 |
| முள்ளங்கி | 80 | 250 | 100 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 50 |
| ஈரப்பலா | 100 | -- | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை மாத இராசி பலன்கள்

## 14.01.2022 - 12.02.2022



**புத்திக் கூர்மையுடன் செயற்பட்டு புதுமை படைக்கும் மேஷ இராசி வாசர்களே!**

தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் செவ்வாய், தன் சொந்த வீடான விருச்சிகத்தில், அஷ்டம ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். தன ஸ்தானத்தில் ராகுவும், 8 இல் கேதுவும் இருக்கிறார்கள். எனவே பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை.

## கொடுக்கல்-வாங்கல்களில் இருந்த மந்த நிலை மாறும்!

**சூரியன் - சனி சேர்க்கை**

மாதத் தொடக்கத்தில், உங்கள் இராசிக்கு பூர்வ புண்ணிய ஸ்தானாதிபதி சூரியனும், தொழில் ஸ்தானாதிபதி சனியும் இணைந்து சஞ்சரிக்கிறார்கள். எனவே பூர்வ புண்ணியத்தின் பலனாக உங்களுக்கு கிடைக்க வேண்டிய பலன்களை சனி தடுத்து விடாமல் இருக்க, சனிக்குரிய சிறப்பு வழிபாடுகளை மேற்கொள்ளுங்கள். பிள்ளைகளால் பிரச்சினைகள், பாகப் பிரிவினையில் தேக்க நிலை, தொழிலில் மந்தம் உருவாகும். எனவே நிதானத்துடன் நடந்து கொள்ளுங்கள்.

**புத சுக்கிர யோகம்**

மாதத் தொடக்கத்தில் பாக்கிய ஸ்தானத்தில் புதனும், சுக்கிரனும் சஞ்சரிக்கிறார்கள். எனவே 'புத சுக்கிர யோகம்' உருவாகிறது. இதனால் கணவன் - மனைவி ஒற்றுமை பலப்படும். செல்வ நிலை உயரும். திடீர் தனவரவு உண்டு. திட்டமிடாது செய்த காரியங்களில் கூட வெற்றி பெறுவீர்கள். கொடுக்கல்-வாங்கல்களில் இருந்த மந்தநிலை மாறும். ஆடை, ஆபரண சேர்க்கை ஏற்படும். குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறிகள் தென்படும்.

**தனுசு செவ்வாய் சஞ்சாரம்**

இதுவரை உங்கள் இராசிக்கு அஷ்டமத்தில் சஞ்சரித்து வந்த செவ்வாய், இப்பொழுது 9 ஆம் இடத்திற்கு வருகிறார். அது குரு பகவான் வீடு என்பதால், அங்கு செவ்வாய் சஞ்சரிக்கும்போது, 'குரு மங்கள யோகம்' உருவாகிறது. இந்த நிகழ்வு தை மாதம் 4 ஆம் திகதி நடைபெற இருக்கிறது. இதன் விளைவாக தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொல்லை தந்தவர்கள்




விலகுவர். சகோதர ஒற்றுமை பலப்படும். புதிய தொழில் தொடங்கும் வாய்ப்பு உருவாகும். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். கடன் சுமை குறைய வழிபிறக்கும்.

**மகர புதன் சஞ்சாரம்**

தை 27 ஆம் திகதி, மகர இராசிக்கு புதன் செல்கிறார். எனவே தொழில் ஸ்தானம் பலப்படுகிறது. 'புத ஆதித்ய யோகம்' உருவாகின்றது. இதனால் கல்விக்காக எடுத்த முயற்சி வெற்றி பெறும். கடமையில் கண்ணும், கருத்துமாக இருந்து செயற்பட்டதால் பொதுவாழ்வில் புதிய பொறுப்புகள் கிடைக்கும். 3, 6 இற்கு அதிபதியான புதன், 10 இல் சஞ்சரிக்கும் பொழுது உத்தியோகத்தில் பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்றவை தானாக வந்து சேரும். அது மட்டுமல்லாமல் ஒரு சிலருக்கு, கூட்டுத் தொழில் புரியும் வாய்ப்புக்கூட உருவாகலாம். இம்மாதம் முருகப்பெருமான் வழிபாடு முன்னேற்றம் வழங்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

வருமானப் பற்றாக்குறை அகலும் மாதம் இது. கணவன் - மனைவிக்குள் அன்பும், ஆதரவும் அதிகரிக்கும். வாங்கிய கடனைக் கொடுத்து மகிழ்வீர்கள். செவ்வாய் பெயர்ச்சிக்குப் பிறகு ஆரோக்கியத் தொல்லைகள் முழுமையாக அகலும். சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. பிள்ளைகளுக்கான கடமைகளைச் செய்து முடிப்பீர்கள். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த ஊதிய உயர்வு கிடைக்கும்.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**விடாமுயற்சியே வெற்றிக்கான வழி என்று சொல்லும் ரிஷப இராசி வாசகர்களே!**

தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசியிலேயே ராகுவும், சப்தம ஸ்தானத்தில் கேதுவும் இருக்கிறார்கள். இராசிநாதன் சுக்கிரன் அஷ்டமத்தில் தன-பஞ்சமாதிபதியான புதனோடு இணைந்து சஞ்சரிக்கிறார். எனவே பொருளாதாரத்தில் இருந்த பிரச்சினை அகலும். சூரியன்- சனி சேர்க்கையால் சில முயற்சிகளில் தாமதங்கள் ஏற்படலாம்.

## மங்கல ஓசை மனையில் கேட்க வாய்ப்புகள் கைகூடி வரும்!

**சூரியன் - சனி சேர்க்கை**

மாதத் தொடக்கத்தில் சூரியனும், சனியும் உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்தில் இணைந்து சஞ்சரிக்கிறார்கள். இதனால் அரசு வழித் தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடும். அரசியல்வாதிகளாலும் பிரச்சினைகள் உருவாகும். சுகங்களும், சந்தோசங்களும் குறையும். தொல்லைகள் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியத் திற்கென்று ஒரு தொகையைச் செலவிடுவீர்கள். நல்ல நல்ல வாய்ப்புகள் வந்தாலும் அதை உபயோகப்படுத்திக் கொள்ள இயலாது. மிகக் கவனமாகச் செயற்பட வேண்டிய காலம் இது. பூர்வீக சொத்துப் பிரச்சினை தலைதூக்கும். தடைகள் அகல யோகபலம் பெற்ற நாளில் சிறப்பு வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது.

**புத- சுக்கிர யோகம்**

புதனோடு சுக்கிரன் சேர்ந்து பலம் பெற்று, நல்ல இடத்தில் சஞ்சரித்தால் 'புத சுக்கிர யோகம்' உருவாகும். இம்மாதத்தில் உங்கள் இராசிக்கு அஷ்டமத்தில் புதனும், சுக்கிரனும் இணைந்து சஞ்சரிக்கிறார்கள். 6 இற்கு அதிபதி சுக்கிரன் 8 இல் சஞ்சரிக்கும் பொழுது 'விபரீத இராஜ யோகம்' செயற்படும். எனவே திடீர் முன்னேற்றங்களும், திட்டமிடாது செய்யும் செயல்களில் வெற்றியும் கிடைக்கும். அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனைப்படி தொழில் வளம் பெருகும். மங்கல ஓசை மனையில் கேட்க வாய்ப்புகள் கைகூடி வரும்.

**தனுசு செவ்வாய் சஞ்சாரம்**

இதுவரை உங்கள் இராசிக்கு 7 ஆம் இடத்தில் சஞ்சரித்த செவ்வாய், இனி 8 ஆம் இடத்திற்கு வரப்போகி




றார். இந்த நிகழ்வு தை 4 ஆம் திகதி நடைபெற இருக்கிறது. குரு வீட்டில் செவ்வாய் வரும்பொழுது பாதிப்பு கடுமையாக இருக்காது. இருப்பினும், வாகனப்பழுதுகளால் வாட்டம், உடல் ஆரோக்கியம் பற்றிய கவலை, ஊர் மாற்றம் பற்றிய சிந்தனை தலை தூக்கும்.

**மகர புதன் சஞ்சாரம்**

தை 27 ஆம் திகதி, மகர இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்திற்கு தனாதிபதி செல்லும் இந்த நேரம், ஒரு உன்னதமான நேரமாகும். கொடுத்த கடன் வசூலாகும். கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள். புதன் பலம் பெறும் போது, பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். கண்ணியமிக்க நண்பர்கள் உங்களுக்கு கைகொடுத்து உதவுவர். புனிதப் பயணம் அதிகரிக்கும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். புதிய தொழில் தொடங்கும் யோகமும் உண்டு. இம்மாதம் அம்பிகை வழிபாடு இன்பம் வழங்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

செலவிற்கேற்ற வரவு வந்து சேரும். செயற்பாடுகளில் தாமதம் ஏற்பட்டாலும் காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடிவிடும். ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்தக் கூடிய சூழ்நிலை உருவாகும். கணவன் - மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்வதன் மூலமே அமைதி கிட்டும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இடமாற்றங்கள் உருவாகலாம்.

பக்கத்திலுள்ளவர்கள் பக்க பலமாக இருக்க அனுசரித்துச் செல்வதே நல்லது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணிகளை நெருக்கடிக்கு உள்ளாக்குபவர்கள்

## பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதாவர்

### போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)

**பொதுப் பயணிகளை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் புகையிரத சேவையாளர்கள் இனி பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டால் அவர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவார்கள் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புகையிரத தொழிற்சங்கத்தினர் இதுவரை காலமும் முன்வைத்த கோரிக்கையை நெருக்கடியான சூழ்நிலையில் இயலுமான அளவில் செயற்படுத்தியுள்ளோம்.

புகையிரத சேவையில் ஈடுபட்டதன் பின்னர் இடை நடுவில் புகையிரதத்தை நிறுத்திவிட்டு பொதுப் பயணிகளை அசௌகரியங்களுக்குள்ளாக்குவது முற்றிலும் தவறானதொரு செயற்பாடாகும்.

புகையிரத சேவையில் மாதம் 2 இலட்சத்திற்கும் அதிகமாக சம்பளம் பெறுபவர்களே பொது பயணிகளை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள்.

பொது பயணிகளை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் தொழிற்சங்கத்தில் ஈடுபடும் புகையிரத சேவையாளர்கள் உட்பட ஏனைய சேவை தொழிற்சங்கத்தினர் இனிவரும் காலங்களில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவார்கள்.

புகையிரத சேவையில் பல்வேறு சிக்கல் நிலை காணப்படுகிறது என்பதை ஏற்றுக் கொள்கிறோம். எனினும் சேவையில் நிலவும் பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை ஊடாக தீர்வு காண முடியும்.



பொதுப் பயணிகளை நெருக்கடிக்குள்ளாக்கும் பொதுப் போக்குவரத்து சேவையாளர்களுக்கு எதிராக இனிவரும் காலங் களில் கடுமையான நடவடிக் கையினை இனி முன்னெடுக்க நேரிடும் என அவர் தெரிவித்தார். (நி)

# பேருந்து மோதி வயோதிபர் பலி

## தீக்கிரையாக்கப்பட்டது பேருந்து



(அவிசாவளை)

பேருந்து மோதி வயோதிபர் ஒருவர் உயிரிழந்த சம்பவத்தை அடுத்து ஆத்திரமடைந்த பிரதேசவாசிகள் பேருந்தை தீ வைத்துக் கொளுத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவிசாவளை-ரிட்டிகஹவெல பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்களை ஏற்றிச் சென்ற பேருந்தே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. இந்த விபத்தில் 65 வயதான முதியவர் ஒருவரே உயிரிழந்தார்.

விபத்தை அடுத்து. பேருந்தின் சாரதி தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த அமைதியின்மையினால் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அவிசாவளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி)

# எரிபொருள் இறக்குமதியில் கலப்படம்

## ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தகவல்

(கொழும்பு)

தற்போது இலங்கைக்கு தரமற்ற எரிபொருள் இறக்குமதி செய்யப்படுவதாக ஜே.வி. பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

சில காலமாக இலங்கைக்கு 92 ஒக்டேன் பெற்றோல் மட்டுமே இறக்குமதி செய்யப்பட்டதாகவும் தற்போது 91 ஒக்டேன் பெற்றோல் மாத்திரமே இறக்குமதி செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அந்த வகை பெற்றோலுடன் மண்ணெண்ணெய் கலக்கப்பட்டதாக அவர் சுட்டிக் காட்டினார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை தற்போது இறக்குமதி செய்யப்படும் எரிபொருள் தரமற்று உள்ளதாகவும் இதனால் வாகனங்கள் பழுதடைவதாகவும் நீண்ட தூரம் பயணம் செய்ய முடியவில்லை எனவும் தனியார் பேருந்து சாரதிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## யார் பேச்சைக் கேட்பது?

சமமான தராசுத் தட்டுகளில் அமரக்கூடிய அல் லது சிறு தகுதி வித்தியாசத்தை உடைய இருவர் ஆளுக்கு ஒன்றைச் சொல்லும் போது நீங்கள் யாரு டைய பேச்சைக் கேட்பீர்கள்?

ஒரு பெண்ணிடம் கணவன் ஒன்றைச் சொல்லுகிறான். மாமியார் ஒன்றைச் சொல்லுகிறார். அந்தப் பெண் எதைக் கேட்பாள்?

ஒரு ஆணிடம் மனைவி ஒன்றைச் சொல்லுகிறாள். தாய் ஒன்றைச் சொல்லுகிறார். எதைப் பின்பற்று வது?

மண்டையைப் போட்டு குழம்பிக்கொள்ள வேண்டாம். தெளிவான முடிவுக்கு வர இரண்டு வழிகள் இருக்கின்றன.

சம்பந்தப்பட்ட இருவருள் யார் நம்முடைய பிரச்சினையை மனிதாபிமானத்தோடு அணுகக் கூடியவர் என்பதை முதலில் முடிவு செய்ய வேண்டும். அவரை அணுக வேண்டும்.

என்னுடைய குழப்பத்தை தீர்த்து வையுங்கள்! நான் உங்களது வழியைத்தான் பின்பற்ற வேண்டும் என்பதில் கட்டாயமாக இராதீர்கள். இதை நீங்கள் உங்களுக்கு ஏற்பட்ட கௌரவப் பிரச்சினையாகவும் எடுத்துக் கொள்ளத் தேவையில்லை என்றெல்லாம் பேசிச் சமாதானப்படுத்திவிட்டு மற்றவர் தான் முக்கியம். அவர் முடிவே தாரக மந்திரம் என்று பின்பற் றுவது ஒரு முறை.

இன்னொன்று-யார் சொல்வதில் நியாயம் இருக்கிறது. யார் சொல்லும் வழி நமக்கு சாதகமானது அல்லது பாதகமானது என்றெல்லாம் பிரச்சினையைத் தெளிவாக அலசி நம் மனதுக்கு எது சரியெ ன்று படுகிறதோ அதைப் பின்பற்றுவது.

இப்படி எடுக்கக்கூடிய முடிவு ஒருவர் விரும்பியபடி தெற்கேயும் இல்லாமல் மற்றவர் விரும்பியபடி வடக்கேயும் இல்லாமல் மூன்றாவது திசையில் நம்மைச் செலுத்துவதாக இருக்கலாம்.

இத்தகைய சூழ்நிலை நிலவும் பட்சத்தில் இருவரையுமே சமாதானப்படுத்துவதன் மூலம் அவர்களுடைய வருத்தத்தை சம்பாதித்துக் கொள்வதைத் தவிர்க்க முடியும். நம் வழியில் நாம் நன்மையடையவும் முடியும்.

ஆனால் அடிப்படையான இரண்டு விடயங்கள் நாம் மனத்தில் கொண்டே ஆக வேண்டும்.

அதாவது இரண்டு பேருடைய விருப்பத்திற்கு எதிரான முடிவு எடுக்க நமக்கு உரிமை இருக்கிறதா?

உதாரணமாக மேலதிகாரியும் அவருக்கு அடுத்த அதிகாரியும் சொல்லும் முரண்பாடான வழிமுறைகளைத் தவிர்த்தும் புதிய வழிமுறையைப் பின்பற்ற நமக்கு உரிமை இல்லை.

இரண்டினுள் ஒன்றுதான். ஆனால் நம்மால் சுதந்திரமாக முடிவெடுக்க முடியும் என்ற குடும்பச் சூழ் நிலையில் மனிதர்கள் முக்கியமல்ல, அவர்கள் கூறும் வழிமுறைகளில் பொருள் இருக்கிறதா? என் பது முக்கியம்.

என்னிடம் பிரியமானவள் மனைவியே அன்றித் தாய் அல்ல. எனவே அவள் முடிவையே நான் பின்பற்றப் போகிறேன் என ஒருவன் முடிவுக்கு வருவானேயானால் அது மடத்தனமானது.


பிரியம் என்பது வேறு. அவர்களது மூளைத்திறன் என்பது வேறு முட்டாள்தனமான ஒரு யோசனையைப் பிரியமான மனைவி கூறுகிறாள் என்பதற்காக அதைப் பின்பற்றுவது என்பது பொருளற்றது.

சரி நம்மால் வெறுக்கப்படும் ஒருவர் அல்லது தெருவில் போகிற முன்பின் தெரியாத ஒருவர் நமக்கு நல்லது என்று கருதி ஒன்றைச் சொல்லுகிறார் என் றால் அதைப் புறக்கணிப்பதா? கூடாது.

ஆக நமக்கு வழிகாட்டும் நபர்கள் யார் என்பது முக்கியமல்ல. நன்மை தரும் வழி என்ன எப்பதே முக்கியம். அதை நாம் தான் முடிவு செய்ய வேண்டும்.


**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## யானையும் நாயும்



முன்னொரு காலத்தில் ஒரு அரசருக்கு சொந்தமான மாளிகை வளாகத்தில் யானை ஒன்று வசித்து வந்தது.

அரசருடன் மிக மிக நெருங்கிய உறவு கொண்ட யானை மிகவும் கவனமுடன் உணவளிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்தது.

அந்த மாளிகையின் அருகே நாய் ஒன்று வசித்து வந்தது. அது மிகவும் பலவீனமாகவும் எலும்பும் தோலுமாய் காணப்பட்டது.

ஆயினும் அரண்மனையிலிருந்து யானைக்காக செய்யப்படும் இனிப்பு சர்தத்தின் மனம் அதனை மிகவும் ஈர்த்தது.

ஒருநாள் அந்த நாயினால் அரண்மனையிலிருந்து வெளிவரும் சாதத்தின் மனம் மிகவும் ஈர்க்கவே அதனால் தடுக்க முடியாத ஆவலுடன் மெல்ல யானை வசிக்கும் கொட்டாரத்தில் நுழைந்தது.

தட்டு தட்டாய் சாதக் கவளங்களை கண்ட நாயோ மெல்ல நகர்ந்து ஒரு கவளத்தை கவ்வி ருசி பார்க்கத் தொடங்கியது.

யானை வேறு பக்கமாய் திரும்பியபடி. உயர்ந்த வகை, இனிப்பு சாதத்தின் கவளங்களை சுவைத்தபடி இருந்ததால் பல நாட்கள் இதை யானையும் கவனிக்கவேயில்லை.

ராஜ வம்சத்தின் உணவான படியால் நாய் நன்கு கொழுத்து வளரத் தொடங்கியது. ஒருநாள் இது யானையின் கவனத்திற்கு எட்டியது.

யானையும் நாயினுடைய வருகையையும், உறவையும் விரும்பி நட்புடன் தினமும் ஒன்றாய் உணவருந்த தொடங்கியது. நண்பர்கள் இருவரும் ஒன்றாக பொழுதைக் கழித்தனர்.

ஒன்றாய் உணவுண்டு உறங்கி எழுந்தனர். விளையாடவும் செய்தார்கள். ஒருவருக் கொருவர் பிரியாமல் மகிழ்வுடன் இருந்தனர். மிகவும் நெருங்கிய நண்பர்கள் ஆகி ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியாமல் இருந்து வந்தார்கள்.

ஒருநாள் ஒரு வழிப்போக்கன் இவர்கள் இருவரையும் ஒன்றாய் கண்டான்.

யானைப் பாகனிடம்,

**வழிப்போக்கன்:** இந்த கொழுத்த நாய் எனக்கு வேண்டும். என்ன விலை இது.

**யானைப் பாகன்:** தனக்கு சொந்தமில்லாத நாயை யானைப் பாகன் நல்ல விலைக்கு விற்று விட்டு பணத்தைப் பெற்றுக் கொண்டான்.

அவன் தன் இருப்பிடத்திற்கு அந்த நாயை கொண்டு சென்றான். அவன் இருப்பிடம் வெகு தொலைவில் இருந்தது.


அரண்மனை யானை இந்த நிகழ்ச்சிக்கு பிறகு துக்கம் அடைந்தது.

தனது உயிர் நண்பனான நாயை பிரிந்த துக்கத்தில் வெறுப்புற்று உண்ணவும், குடிக்கவும், குளிக்கவும், மறுத்துக் கிடந்தது.

இறுதியாக இதனைக் கண்ட ஆனைப் பாகன் அரசருக்கு தகவல் தெரிவித்தான்.

(தொடரும்)

# மகாபாரதம்



306

ஆகவே நீ சுவர்க்கத்திற்குச் செல்வாயாக. தூய மனத்துடன் நீ அளித்த இந்த எளிய தானத்தால் இந்த நற்கதி உமக்கு வாய்த்தது.

ஆரவாரத்துடன் மிகுந்த பொருளை வாரி வாரிக் கொடுப்பது தானமல்ல. அது வீண் பெருமைதான். அதனால் ஒரு பயனும் இல்லை.

ஆயிரம் கொடுக்க வேண்டிய இடத்தில் உள்ளன் போடு நூறு கொடுத்தால் போதுமானது.

நூறு கொடுக்க வேண்டிய இடத்தில் பத்துக் கொடுத்தால் போதும். பத்துக் கொடுக்க இடத்தில் ஒன்று கொடுத்தால் போதும். ஒன்றும் கொடுக்க முடியாவிடின், தூய மனத்துடன் கொடுக்கும் தூய நீரே போதும்.

ரத்தி தேவன் என்னும் அரசன் ஒன்றும் இல்லாத சூழலில் தூய மனத்துடன் தூய நீர் மட்டுமே அளித்தான். அதனாலேயே அவன் சுவர்க்கம் அடைந்தான்.

தருமமானது நியாயமான வழியில் சிறிய அளவில் சம்பாதிக்கப்பட்டாலும் அது பிறருக்குத் தூய மனத்துடன் அளிக்கப்படுவதாகும். நியாயமில்லாத வழிகளில் பெருஞ் செல்வத்தைத் திரட்டிப் படாடோபமாகச் செய்யப்படுவது தருமம் அன்று. அதனால் மகிழ்ச்சியும் அல்ல. பயனும் அல்ல.

"திருகன் என்னும் மன்னன் ஓராயிரம் பசுக்களைத் தானமாகச் செய்தான். அந்த ஆயிரம் பசுக்களில் ஒரு பசு வேறொருவனுக்குச் சொந்தமானது. ஆயிரத்தில் ஒன்று தான் அப்படி.

ஆனால் அவன் இதற்காக நரகம் செல்ல நேரிட்டது. நாம் கொடுப்பது எதுவாயினும், எவ்வளவாயினும் அது நல்ல வழியில் வந்ததாக இருக்க வேண்டும். செல்வம் மட்டுமே புண்ணியத்திற்குக் காரணமாகாது.

அதுபோலவே பல வித யாகங்களால் வரும் புண்ணியமும் நியாயமான வழியில் வந்த பொருளைச் சக்திக்கு ஏற்ற வாறு தானம் செய்து சம்பாதித்த புண்ணியத்திற்கு ஈடாகாது.

ஒருவன் ராஜசூய யாகமோ, அஸ்வமேத யாகமோ, செய்து ஏராளமான பொருளை வாரி வாரிக் கொடுத்தாலும் நீர் உமது தானத்தினால் பெற்ற பயனுக்கு நிகரான பயனை அவன் அடையமாட்டான்.

நீர் ஒரு பிடி மாவினால் சுவர்க்கத்தை அடையும் புண்ணியம் செய்ததால், உங்கள் அனைவரையும் அழைத்துச் செல்ல அங்கிருந்த அற்புத விமானம் வந்திருக்கிறது.

அதில் நீங்கள் நால்வரும் ஏறிச்செல் லுங்கள். நான் தான் தருமம். என்னை நன்கு பாருங்கள்" என்று கூறித் தரும தேவதை மறைந்தது. அந்த நால்வரும் சுவர்க்கம் சென்றனர்.

அப்படி தரும தேவதையும் நால்வரும் மறைந்த பிறகு நான் வளையிலிருந்து வந்தேன். அங்கு சிந்தியிருந்த மாவில் படுத்துப் புரண்டேன். என் மனம் தவமகிமையுடன் கூடிய மாவின் மீது சென்றதால் என் உடலில் பாதி பொன்னிறமாயிற்று.

மற்றொரு பக்கம் எப்போது அப்படி பொன்னிறம் ஆகும் எனக் கருதி யாகசாலைகளில் சுற்றித் திரிந்தேன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவற்ற சினேகிதனிடம் சேர்வதைவிட புத்தி சாலியான விரோதியை அடைவதே மேல்.
– ஷேக்ஸ்பியர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www:valampurii:lk

# பகை கொண்ட இரு நாடுகள் இலங்கைக்கு உதவும் விந்தை

இலங்கையின் பங்காளியாக இந்தியா எப்போதும் இருக்குமென இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தனது கீச்சகத்தில் (டுவிட்டரில்) பதிவிட்டுள்ளார்.

அதேநேரம் இலங்கைக்கு உதவ சீனா எப்போதும் தயாராக இருப்பதாக சீன வெளி விவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இங்குதான் பலம்மிக்கவையும் பகை கொண்டவையுமான இரண்டு நாடுகளை இலங்கை ஊச்சு காட்டுவது தெரிகிறது.

ஆம், இலங்கை சீனாவுடன் தனது உறவைப் பலப்படுத்தும்போது அண்டை நாடான இந்தியா இலங்கையை அதட்ட வேண்டும். ஆனால் அவ்வாறு செய்ய முடியாத இக்கட்டான சூழ்நிலைக்கு இந்தியா தள்ளப்பட்டுள்ளது.

அதாவது சீனாவுடனான உறவைப் பலப்படுத்த வேண்டாம் என்று இலங்கைக்குக் கூறமுடியாத அளவில் இந்தியா வந்துள்ளதெனில், அது இலங்கை ஆட்சியாளர்களின் மிக உன்னதமான இராஜதந்திரம் எனக் கூறலாம்.

அதேநேரம், இந்தியாவுடனும் தனது தொடர்பை இலங்கை மிகநுட்பமாகப் பேணிக் கொள்கிறது.

இந்த இடத்தில் சீனா கொதிப்படைய வேண்டும். அதாவது எனது உதவிகளைப் பெறும் போது, இந்தியாவுடனான தொடர்பைக் குறைத்துக்கொள்ள வேண்டும் எனக் கடுந் தொனியில் சீனா இலங்கைக்குக் கூற வேண்டும். ஆனால் அதையும் சீனா செய்யவில்லை.

ஆக, பகைமை கொண்ட நாடுகளான இந்தியாவும் சீனாவும் இலங்கைக்கு உதவுவதில் – இலங்கையின் நண்பனாக இருப்பதில் கடும் ஆர்வம் காட்டுகின்றன எனும்போது, அது இலங்கை வகுத்த அதி உன்னதமான வியூகம் எனலாம்.

அதேநேரம், இரண்டு பகை நாடுகள் இலங்கைக்கு உதவுவதில் போட்டி போடுகின்றன எனும்போது, அவை இலங்கையில் தமது ஆதிக்கத்தைச் செலுத்த முற்பட்டுள்ளன என்ற பக்கத்தையும் நாம் பார்க்காமல் இருக்கமுடியாது.

எதுஎவ்வாறாயினும் இலங்கைக்குக் காலம் பகைத்தால், இந்தியாவும் சீனாவும் இலங்கையின் கழுத்தை நெரித்துக் கொள்ளும் என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

இவற்றை காலம்தான் தீர்மானிக்கும் என்பதால் அதனை ஒருபுறம் வைத்துக்கொள்ளலாம்.

ஆனால் நாம் இங்கு உற்றுநோக்க வேண்டிய விடயம் இலங்கையின் பங்காளியாக இந்தியா எப்போதும் இருக்கும் என்று கூறுவதற்குள், இலங்கையுடனான நட்பைப் பேணுவதில் இந்தியா ஆர்வம் காட்டுகிறதே தவிர, ஈழத் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணுகின்ற மனநிலை இந்தியாவிடம் இப்போதைக்கு இல்லை என்பதையும் உணர்ந்து கொள்ளமுடியும்.

இங்குதான் தமிழ் அரசியல் தரப்புகள் புது வியூகம் அமைக்கவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியுள்ளன.

# ஒமிக்ரோன் திரிபுடன் உலகளாவிய ரீதியில் கொரோனா பரவல் முடிவுக்கு வரலாம்

## இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன ஆருடம்

(கொழும்பு)

கோவிட் தொற்று முடிவுக்கு வருவது தொடர்பில் தற்போது கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், ஒமிக்ரோன் திரிபுடன் உலகளாவிய ரீதியில் கோவிட் பரவல் முடிவுக்கு வரலாம் என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

எப்பாவல அரச வைத்தியசாலையில் 55 மில்லியன் செலவில் உருவாகும் ஆரம்ப மருத்துவப் பிரிவுக்கு நேற்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன விஜயம்செய்திருந்தார்.

இதன்போது, கோவிட் நான்காவது தடுப்பூசி தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் சன்னஜயசுமன இதனைத் தெரிவித்துள்ளார். (ஞா)

# எந்தவொரு கட்சியுடனும் கூட்டணி அமைக்கத் தயாரில்லை - ஜே.வி.பி

(கொழும்பு)

அரசியல் கட்சிகள் மீதான நம்பிக்கை முற்றாகத் தகர்க்கப்பட்டதால் கட்சிகளிலிருந்து வெளியேறும் ஆதரவாளர்கள் தேசிய மக்கள் சக்தியில் வந்து இணைகின்றனர். இவ்வாறானதொரு நிலையில் தேசிய மக்கள் சக்தி வேறு எந்தக் கட்சியுடனும் கூட்டணியை வைத்துக் கொள்வதில்லை என்பதில் உறுதியாக உள்ளது என மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) நிர்வாகக் குழு உறுப்பினர் கே.டி.லால்காந்த் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது கட்சி வேறு எந்தக் கட்சியுடனும் கூட்டணி வைத்துக்கொள்ள போவதில்லை என்ற தீர்மானத்தில் உறுதியாக உள்ளது.

விலகிச் செல்பவர்களுக்கு மீண்டும் இணைவதற்கு ஒரு கட்சி இல்லை. மக்கள் இருக்கும் கட்சிகளிலிருந்து விலகி வருவார்களாயின் அவ்வாறான கட்சிகளுடன் நாம் எவ்வாறு கூட்டணி அமைக்க முடியும்?

எனவே, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, அரசு என எந்தக் கட்சியிலும் நாம் கூட்டணி அமைக்கப்போவதில்லை.

எனினும், இந்தக் கட்சிகளில் முற்போக்குவாதிகள் யாரேனும் இருப்பார்களாயின் அவர்கள் எம்முடன் வந்து இணைந்து கொள்ளலாம் என்றார். (ஞா)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணி யிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** மாகியப்பிட்டிசந்தை, மதவடி, பெருமாள் கடவை, வைரவர் கோவில், சண்டிலிப்பாய் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** ஆசிக்குளம், புபுதுகம, முகத்தான்குளம் 1 ஆவது பண்ணை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# அன்பே சிவம் நிகழ்வும் விருது வழங்கலும்

(குப்பிழான்)

தைப்பூசத் திருநாளை முன்னிட்டு அகில இலங்கை சைவமகா சபையின் ஏற்பாட்டில் அன்பே சிவம் நிகழ்வும் விருது வழங்கலும் இன்று 17 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் அகில இலங்கை சைவ மகாசபையின் தலைவர் சிவத்திரு நா.சண்முகரத்தினம் தலைமையில் இடம்பெறும்.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்புச் சேவைகள் திணைக்கள ஆணையாளர் இ.குருபரன், சிறப்பு விருந்தினர்களாக தமிழ்ச் சைவப் பேரவையின் தலைவர் ஓய்வுநிலை நீதிபதி இ.வசந்தசேனன், சைவ வித்யா விருத்திச் சங்கத் தலைவரும் மூத்த கவிஞருமான சோ.பத்மநாதன், கிளிநொச்சி திருநெறிக் கழகத்தின் செயலாளர் அ.சிவஞானசுந்தரம் கௌரவ விருந்தினராக யாழ். போதனா மருத்துவமனை தற்காலிகப் பணிப்பாளரும் வடமாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் (தற்காலிகம்) மருத்துவமனை கலாநிதி க.நந்தகுமாரன் ஆகியோர் கலந்து கொள்வர். (5-18)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## ஆன்மநிலை அறிவது ஏன்?



ஆன்மநிலையறிவதனால் யாது பயன்? என்று சிலருக்கு ஒரு கேள்வி பிறக்கலாம்.

பல காரணங்களாலும் வளர்ந்து கொண்டே இருக்கும் அறிவின் சக்தி புலன்கள் ஐந்திலும் இயங்கி, தன் தத்துவங்களாகிய உருவம், ஒலி, ஒளி, சுவை, மணம் என்ற ஐந்து பகுதிகளையும் அறிந்துவிட்ட பின் மேலும் வேகம் அதிகரித்து மீதியாகவும், அறியப்படாததும் ஆகிய தன் ஆதி நிலையை, அரூபசக்தி தத்துவத்தை, அறியும் ஆர்வமாக ஒரு எழுச்சி பெறுகிறது.

இவ்வகையில் வேகம் கொண்ட அறிவுக்கு எவ்வளவு தான் புலன்களின் வாயிலாக அனுபோகங்கள் கிடைத்த போதிலும், அதனால் முழுத் திருப்தியும், அமைதியும் பெற முடியாது குறைவுபட்டே நிற்கிறது. அந்தப் பக்குவத்தின் தன்னிலையை அறிந்து விட்டால் எழுந்த வேகம் தணிந்து முழுப் பயன் பெற்று விடுகிறது.

உதாரணம் : ஒரு ஆற்றில் தண்ணீர் வருகிறது. குறுக்கே பல ஏரிகள், குளங்கள், நீர்நிலைகள் இருக்கின்றன. ஆற்றுநீர் அந்தப் பள்ளங்களை நிரப்பும் வரையில் அதைத் தாண்டிப் போகாது. நிரம்பி விட்டபின் அதன் வேகம் மேலும் முன்னோக்கி ஓடுகிறது. ஒரு மேடு, மலை குறுக்கிட்டாலும் அதைச் சுற்றிக் கொண்டு சென்று கடைசியாகக் கடலில் சங்கமமாகி விடுகிறது. அதன் வேகம் அத்துடன் முடிகிறது.

அதுபோலவே அறிவின் வேகத்திற்கேற்றபடி புலன்களின் மூலம் இயங்கி, மிகுதி வேகம் தன்னையறிந்த பிறகு முடிவடைகிறது. மேலும் தன்னிலையாகிய ஆதி தத்துவம் அறிந்தபின், அங்கே அறிவின் தத்துவமும் [illegible] தெரிந்து விடுவதால் தானே பல உடலுருவாய் இயங்கும் ஒருமைத் [illegible]ணம், எழுச்சி, மாற்றம் அனைத்தும் தெளிவாக விளங்கி விடுகின்றன. இந்நிலையில் அறிவு அமைதியைப் பெறுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி II

54

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



**எண்ணிக்கை அளவைக் குறிப்பிடுவது எண். அளவு காட்டாமல் மிகுதியைக் குறிப்பிடும் எண்ணுப் பெயர்களும் தமிழில் இருந்தன. அவற்றை எண்ணால் குறிக்காமல் எழுத்தால் குறித்துள்ளனர். உதாரணமாக பதுமம், பூரியம், மகாயுகம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றை தொல்காப்பியர் "அல்பெயர் எண்" என்று குறிப்பிடுகிறார்.**

### பின்னம்

ஒன்றிற்குப் பின்னே உள்ள எண்களைப் பின்னம் என்கிறோம். பின்னே உள்ளது பின்னம். தொல்காப்பியர் அரை, கால் முதலான பின்ன எண்கள் ஒன்றரை என்பது போல் முழு எண்ணோடு புணர்வதையும், காலே அரைக்கால் என்பது போல் பின்னத்தோடு பின்னம் புணர்வதையும் குறிப்பிடுகிறார். ஒன்று என்னும் முழுமையைப் பின்னோக்கிப் பகுக்கும் போது தமிழர்கள் இரண்டு வகையான பாகுபாடுகளைக் கடைப்பிடித்துள்ளனர்.

### பகுப்புப் பெயர்கள் :

1. ஒன்று என்னும் முழுமையை இரண்டு இரண்டாகப் பகுத்துக் கொண்டு செல்லும் முறைமை. இதில் அரை 1/2; கால் 1/4; அரைக்கால் - 1/8; வீசம் (அல்லது) மாகாணி - 1/16; அரைவீசம் - 1/32; கால்வீசம் - 1/64; அரைக் கால்வீசம் - 1/128. இதைவிட மூன்று வீசம்- 3/16; முக்கால் வீசம் - 3/64 எனப் பின்னத்தின் பெயரும் குறியீடும் அமையும்.

2. ஒன்று என்னும் முழுமையை முதலில் ஐந்தாகப் பகுத்து அதன் பின்னத்தை இரண்டிரண்டாகப் பகுத்துக்கொண்டு சொல்லும் முறைமை. இதில் நான்மா - 1/5; இருமா - 1/10 ; ஒருமா - 1/20; அரைமா - 1/40; காணி - 1/80; அரைக்காணி - 1/160; முந்திரி - 1/320 எனப் பின்னத்தின் பெயர்கள் அமையும்.

இவை மென்மேலும் பகுக்கப்பட்டு அல்லது கூட்டப்பட்டு பெயரிடப்படுகின்றன. முக்காணி - 3/80; அரைக்காணி முந்திரி - 3/320; அரைக்காணி = 2 முந்திரி அரைக்காணி முந்திரி = அரைக்காணி + முந்திரி ஒருமா = 4 காணி, மாகாணி = மா + காணி= 5 காணி= வீசம் என்பனவாகும். இவ்வாறு இது தொடரும். கீழ்க் காணி என்றால் 25 ஆயிரத்து 600 இல் ஒரு பங்கு. கீழ் முந்திரி என்பது ஒரு முந்திரியை 320 பாகங்களாகப் பகுத்து (பிரித்து) அதில் ஒரு பாகமாகும். அதாவது 1 முந்திரி = 320 கீழ் முந்திரி. அல்லது கீழ் முந்திரி என்பது 1 இலட்சத்து 2 ஆயிரத்து 400 இல் ஒரு பங்கு ஆகும். (கீழ் முந்திரி = 1/102400 ஆகும்).

ஒரு மடங்கு எண்ணின் பெயரில் பெரிய எண்ணின் பெயருக்குப் பிறகு தான் சிறிய எண்ணின் பெயர் வரும். உதாரணமாக, அரைக்கால்= அரை X கால். இதில் அரை என்ற பெரிய எண்ணிற்குப் பிறகு தான் கால் என்ற சிறிய எண் வரும். ஒரு எண் +ஏ+இரண்டாம் எண்=முதலாம் எண் +இரண்டாம் எண். உதாரணமாக,

ஒன்று + ஏ+கால்= ஒன்றேகால் = ஒன்று + கால்= 1 + 1/4 =5/4.

ஒன்று + ஏ + முக்கால் =ஒன்றே முக்கால் = ஒன்று + முக்கால் =1 + 3/4 =7/4.

**ஒரு மடங்கு எண்ணின் பெயரில் பெரிய எண்ணின் பெயருக்குப் பிறகு தான் சிறிய எண்ணின் பெயர் வரும். உதாரணமாக, அரைக்கால்= அரை Xகால். இதில் அரை என்ற பெரிய எண்ணிற்குப் பிறகு தான் கால் என்ற சிறிய எண் வரும். அதுபோலவே ஒன்றே கால், ஒன்றேமுக்கால் என்பனவும்.**

ஒரு இம்மி கூட விடமாட்டேன் என்ற சொல் நாளது வரையும் வழக்கத்திலிருக்கிறது. நுட்பமாகக் கணக்குப் பார்க்கும் ஒருவனைப் பார்த்து என்ன இம்மிக் கணக்குப் பார்க்கிறாயோ என்று கேட்கும் வழக்கத்தைத் தமிழ் மக்கள் நன்றாய் அறிவார்கள்.

இம்மி என்பது மிகச் சிறிதான மத்தங்காய்ப் புல்லரிசி. அது எள், தினை என்பன போல் சிற்றளவைப் பொருளாயிற்று. சிறுமையை உணர்த்தும் இல் என்னுஞ் சொல்லினின்று, இம்மியென்னும் பெயர் தோன்றியிருக்கலாம் என்று கருதப்படுகிறது. இம்மி என்பது 1/1075200 இற்குச் சமனாகும். அதாவது பல காலமாக பயன்பட்டு வரும் 'இம்மி' என்கிற சொல்லின் பொருள் 10,75,200 இல் ஒருபங்காகும். (சில இடங்களில் 21,50,400 இல் ஒரு பங்கு எனக்குறிப்பிடப்படுகிறது.) அடி சாரம் என்பது 18 இலட்சத்து 38 ஆயிரத்து 400 இல் ஒரு பங்கு ஆகும். இதுபோன்ற நுண்ணிய அளவுகளில் சில அட்டவணை 5 இல் தரப்பட்டுள்ளது. இதன் சிறப்பு என்னவென்றால் 3, 5, 7, 11, 13,17 போன்ற இலக்கங்களும் அவற்றின் பெருக்குத் தொகைகளும் பிரிக்கப்படுவதற்காக இந்த நுட்பமான வாய்ப்பாடுகள் வழக்கத்தில் இருந்தன.

எண்ணுப்பெயர்கள் சிற்றிலக்கம் (கீழ்வாயிலக்கம்), பேரிலக்கம் (மேல்வாயிலக்கம்) என இருவகைப்படும். ஒன்று, இரண்டு, மூன்று முதலிய முழுவெண்கள் பேரிலக்கம் எனப்படும். அரை, கால், அரைக்கால் வீசம் (மாகாணி) முதலிய பின்னவெண்கள் சிற்றிலக்கம் எனப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றிலக்கத்திலும் கீழ்வாயிலக்கமென்றும், மேல்வாயிலக்கமென்றும் இருவகையுண்டு. கீழ்வாய்ச் சிற்றிலக்கத்தோடு ஒப்பு நோக்கியே, அரை, கால்,அரைக்கால் முதலியன மேல்வாய்ச் சிற்றிலக்கமெனப்படும்.

### மேல்வாய்ச் சிற்றிலகம் என்பதில் அடங்கும் அலகுகள்

மேலரை (அரை), மேற்கால் (கால்), மேலரைக்கால் (அரைக் கால்), மேல்வீசம் (வீசம்).

3/4 - முக்கால்; 1/2 - அரை; 1/4 - கால்; 1/5 - நாலுமா; 3/16 - மூன்று வீசம்; 3/20 - மூன்றுமா; 1/8 - அரைக்கால்; 1/10 - இருமா; 1/16 - மாகாணி (வீசம்); 1/20 - ஒருமா; 3/64 - முக்கால் வீசம்; 3/80 - முக்காணி; 1/32 - அரைவீசம்; 1/40 - அரைமா; 1/64 - கால் வீசம்; 1/80 - காணி; 3/320 - அரைக்காணி முந்திரி; 1/160 - அரைக்காணி; 1/320 - முந்திரி; மேல்வாய்ச் சிற்றிலகத்தில் அடிமட்ட எண், மேல்முந்திரி / முந்திரி = 1/320 ஆகும்.

### கீழ்வாய்ச் சிற்றிலகம்

1/640 - கீழரை;1/280 - கீழ்க் கால்; 1/2560 - கீழரைக்கால்; 1/5120 -கீழ் வீசம்; 1/102400 - கீழ் முந்திரி; 1/1075200 - இம்மி; 1/23654400 -மும்மி; அணு;குணம்; பந்தம்; பாகம்; விந்தம்; நாகவிந்தம்; சிந்தை; கதிர்முனை;குரல்வளைப்படி வெள்ளம்; நுண்மணல்;தேர்த்துகள் (1/232 3824530227 200000000)

| அட்டவணை -5 பின்ன அளவுகள் | |
|---|---|
| 1 இம்மி | 1/1075200 |
| 1 இம்மி | 11 மும்மி |
| 1 மும்மி | 7 அணு |
| 1 அணு | 9 குணம் |
| 1 குணம் | 5 பந்தம் |
| 1 பந்தம் | 6 பாகம் |
| 1 பாகம் | 7 விந்தம் |
| 1 விந்தம் | 17 நாகவிந்தம் |
| 1 நாகவிந்தம் | 14 சிந்தை |
| 1 சிந்தை | 1/74481555456000 |
| 1 கதிர்முனை | 1/489631109120000 |
| 1 குரல்வளைப்படி | 1/9585244364800000 |
| 1 குரல்வளைப்படி | 60 வெள்ளம் |
| 1 வெள்ளம் | 100 நுண்மணல் |
| 1 தேர்த்துகள் | 1/2323824530227200000000 |

| கணித தமிழ் குறியீடுகள் | | |
|---|---|---|
| ௶ - பற்று | கஜ - கஜம் | பொ - பொன் |
| ௷ - வரவு | வெ - வேலி | வ - வகையரா |
| ௹ - ரூபாய் | ஆ - ஆக | சி - சில்வானம் |
| ௺ - இலக்கம் | இ - வரைக்கும் | ௳ - நாள் |
| பா - பாரம் | ந - நன்செய் | ௴ - மாதம் |
| நி - நிலம் | பு - புன்செய் | ௵ - ஆண்டு |
| வரா - வராகன் | வ - வசம் | நா - நாளது |
| கு - குழி | ப - பணம் | |
| நெ - நெல்லு | கா - காசு | |

(தொடரும்)

## 14 பேர்...

உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மரணங்கள் நேற்று முன்தினம் நிகழ்ந்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன் அடிப்படையில் இலங்கையில் கொரோனாவால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 15, 211 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## துன்னாலையில்...

பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த பாலசிங்கம் வின்சன் (வயது- 23) என்ற இளைஞரே தலைப்பகுதியில் வாள்வெட்டுக்கு இலக்கான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஞா-60)

## சுதந்திரக் கட்சி...

யாடியுள்ளது என தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் தேர்தல்களில் போட்டியிடுவதற்காகப் பலம் பொருந்திய அரசியல் அமைப்பை உருவாக்கும் நோக்கில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடி வருகின்றது.

இதற்கமைவாக எதிர்வரும் தேர்தல்களில் மிகவும் பலம் பொருந்திய அமைப்பாகச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும்என்று கட்சியின்உயர்பீட உறுப்பினர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். (ஞா)

## மின் துண்டிப்பு...

இன்று இடம்பெறவுள்ளது.

இலங்கை மின்சார சபை மற்றும் கனியவள கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்கவுள்ளதாக கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

மின்சார விநியோகத்திற்கு அவசியமான எரிபொருள் விநியோகம் தொடர்பில் இதன்போது இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதுள்ள எரிபொருளுக்கு அமைய நாளை வரையில் துண்டிப்பின்றி மின்சார விநியோகத்தை வழமையாக மேற்கொள்ள முடியும். கனியவள கூட்டுத்தாபன அதிகாரிகளுடனான இன்றைய கலந்துரையாடலில், எதிர்வரும் 22 ஆம் திகதி வரை தேவையான எரிபொருளைக் கோரவுள்ளோம் என்றார். (ஞா)

## இவ்வருடம்...

எச்சரித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக விவகாரம் தொடர்பான அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள 2022 ஆம் ஆண்டின் அறிக்கையில் உலக பொருளாதார நிலைமை குறித்து சர்வதேசம் எதிர்நோக்கும் பொருளாதார பிரச்சினைகள் குறித்து சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதிகரித்து வரும் பணவீக்கம் மற்றும் நடப்புக் கணக்கு பற்றாக்குறை பாரிய அளவில் உள்ள போதிலும், இலங்கை மற்றும் பாகிஸ்தான் மத்திய வங்கிகள் கடந்த ஆண்டின் இரண்டாம் அரையாண்டு பகுதியில் வட்டி விகிதத்தை அதிகரித்தன.

இதன் காரணமாக நிதி மற்றும் விலைகளின் ஸ்திரத்தன்மையினை பேணுவது கடினமான விடயமாக இந்த நாடுகள் எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளது. (ஞா)

## பிரதேச...

கடமையாற்றிவந்த எஸ்.கிருஸ்ணேந்திரன் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளராகவும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளராக கடமையாற்றி வந்த பரமோதயன் ஜெயராணி முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளராகவும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளராகக் கடமையாற்றிவந்த ரி.அகிலன் பூநகரி பிரதேச செயலாளராகவும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த இடமாற்றம் கடந்த வருடம் அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும் நடைமுறையாகாத நிலையில் தற்பொழுது மீண்டும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த பிரதேச செயலாளர்கள் புதிய பிரதேச செயலகங்களில் எதிர்வரும் புதன்கிழமை கடமைப் பொறுப்புக்களை ஏற்கவுள்ளனர். (ஞா-100)

## சந்திரிகா...

ஜனநாயகம், மனிதாபிமான பண்புகள் நிறைந்த அ[illegible] யும் அனைவ[illegible]

அமைதியான சூழல் ஒன்றையும் கட்டியெழுப்புவதற்கு, சமூகத்தினை வழிநடத்தக்கூடிய அரசியல் கட்சியொன்று அவசியமாக இருக்கின்றது.

அந்த வெற்றிடத்தினைப் பூர்த்தி செய்யும் நோக்கத்திற்காகவே இப்புதிய அரசியல் சக்தியை முன்னெடுத்துச் செல்வதற்கு தீர்மானித்துள்ளதாக குமார வெல்கம கூறியுள்ளார்.

எமது கொள்கைகளையும், இலக்குகளையும் ஏற்றுக்கொள்பவர்கள் எம்முடன் இணைந்து பயணிக்க முடியும் எனவும், அவ்விதமானவர்களுக்காக எமது கதவுகள் திறந்தே இருக்கும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம கூறியுள்ளார். (ஞா)

## மின்சார சபைக்கு...

வழங்குவதற்கு தேவையான எரிபொருள் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திடம் இல்லை எனவும் தற்போதுள்ள எரிபொருளை மின்சாரம் உற்பத்தி செய்ய பயன்படுத்தினால் வாகனங்கள் இயங்க முடியாது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டால், ஒரு நாளைக்கு சில மணி நேரம் மின்வெட்டு மூலம் மின் விநியோகத்தை நிர்வகிக்க முடியும். ஆனால் வாகனம் ஓடுவதில் அத்தகைய நடவடிக்கை எடுக்க முடியாது என்று அமைச்சர் கம்மன்பில கூறினார். (ஞா)

## வீடு...

தென்மராட்சி பகுதியில் மாணவர் குழுவொன்று வீடு புகுந்து தாக்கியதில் இளம் குடும்பப் பெண் காயமடைந்துள்ளார்.

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அல்லாரை பகுதியில் நேற்று முன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அயலிலுள்ள இரண்டு வீடுகளிலுள்ளவர்களிற்கிடையில் ஏற்பட்ட தகராறையடுத்து, மாணவனும் நண்பர்களும் அயல் வீட்டுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதில், 26 வயதான இளம் குடும்பப் பெண்ணொருவர் காயமடைந்த நிலையில், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஞா)

## கூட்...

பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு, வடக்கு, கிழக்கு அபிவிருத்தி, மனித உரிமைப் பிரச்சினை [illegible] தல் உள்ளிட்ட முக்கியமான விடயங்கள் குறித்து இந்த பேச்சுவார்த்தையில் கவனம் செலுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஞா)

## அரிசி விலை...

தகர்கள் அரிசி விலையினை தொடர்ந்தும் அதிகரித்து வருவதாக நுகர்வோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மேலும் சில பிரதேசங்களில் அரிசி வகைகளுக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது. 140 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் நாடு அரிசி தற்போது 165 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. 160 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த ஒரு கிலோ கிராம் சம்பா அரிசி தற்போது 180 ரூபாய்க்கும் மேல் அதிகரித்துள்ளது.

120 முதல் 125 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டு வந்த ஒரு கிலோ கிராம் வெள்ளை பச்சை அரிசி 140 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதுடன் 110 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த ஒரு கிலோ கிராம் சிகப்பு பச்சை அரிசி 125 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதனை தவிர ஒரு கிலோ கிராம் கீரி சம்பா சுமார் 300 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சந்தைக்கு கிடைக்கும் அரிசித் தொகை குறைந்துள்ளதால், இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அரிசி விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர். (ஞா)




































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடஇந்திய காசி யாத்திரை

ஆரம்பம் : 20.04.2022 | நாட்கள் : 16

காசி, கயா, அலகாபாத், டெல்லி, ஆக்ரா, மதுரா, இராமேஸ்வரம், சீரடி பாபா, மும்பாய், கொல்லிமலை, சித்தர் பூமி.

- விபரங்களைக் கேட்டு அறிந்து பதிவுசெய்க.
- 10 பேர் மட்டும்.

T. ஸ்ரீரெங்கநாதன்
T.P. 077 768 0102, 077 693 9716

நீண்ட நாட்களின் பின் ஆரம்பமாகின்றது.
உங்களின் ஆதரவை நாடுகின்றேன். (C-3538)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 இல் பிறந்த சூரி, செவ்வாய், 37 கிரக பாவம் உடைய ஆசிரியராக தொழில் புரியும் மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை. (9698)

074 222 3996

## சிறுநீரகம் தேவை

O, B இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை. (9698)

076 239 9874

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

## உடனடி வேலை வாய்ப்பு

யாழ் நகரப்பகுதியில் உள்ள நிறுவனத்தில் சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு வேலைக்கு ஆள் தேவை (C-3491)



சம்பளம் - 30'000/-

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
0777-068-777

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-975/=Kg

எமது நேரடிக்கிளைகள்

யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய் • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி (C-3491)

0768226240 DHL

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி A32 மெயின் றோட்டில் 1 ஆம் வீதியில் 51 பரப்புக் காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
நாவற்குழி சந்தியிலிருந்து 300m தூரம்
வீடமைப்பதற்கு நல்ல சூழல்
நிலப்பரப்பு ஒரு பரப்பின் விலை 5 இலட்சம். (9702)

076 890 9259
077 015 0353

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை



அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் 100% பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெறுகின்றது.

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 6113

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**
இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 3536



**அருள்**
இ.போ.ச டிப்போ எதிரில், பருத்தித்துறை. | இல.01, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி. | இல.01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி.

தொ.பே:- 076 443 1576 (C-3559)

## விற்பனைக்கு

வீட்டுப் பாவனையிலுள்ள அலுமாரி, Glass fitting உடனான கனனி அறை, தொட்டில், Gym machine, சைக்கிள், விளையாட்டுக் கார் விற்பனைக்கு உண்டு. (9703)

077 640 1722
070 687 3133

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி ஐயனார் கோவில் வீதியில் 18 அடிப் பாதையுடன் 18 பரப்புக் காணி 1 1/2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு.

[மேட்டுநிலம், நிலப்பரப்பு]
நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோமீற்றர் தூரம்
ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (9661)

தொடர்பு
077 911 6983, 077 658 5999
077 288 0152, 077 623 4204


## வவு. வைத்தியசாலைக்குள் வாள்வெட்டுக் குழு அட்டகாசம்

வவுனியா பொது வைத்தியசாலைக்குள் நேற்று பிற்பகல் நோயாளர்களை பார்வையிடும் உறவினர்கள் என்று உள் நுழைய முற்பட்ட சிலர் அங்கு பார்வையாளர்கள் காத்திருக்கும் பகுதியில் தங்கியிருந்துள்ளனர்.

எனினும் பாஸ் நடைமுறை காரணமாக உள்நுழைய முடியாமல் வெளியே நீண்ட நேரம் காத்திருந்துள்ளனர். வைத்தியசாலை விடுதியிலிருந்து வெளியே வந்த நபர் ஒருவர் மீது மறைந்திருந்து குறித்த குழுவினர் தாக்க முற்பட்ட போது பாதுகாப்பு ஊழியர்கள் விரைந்து செயற்பட்டதால் வாள்வெட்டுக்குழுவினரின் முயற்சி பிசுபிசுத்துள்ளது. வெளியே காத்திருந்த வாள் வெட்டுக்குழுவினர் வைத்தியசாலை பொலிசாரின் வருகையுடன் அங்கிருந்து தப்பி சென்றுவிட்டதாகவும் வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

(ஞா)

# மரண அறிவித்தல்

பிறப்பு
1947 - 08 - 15



இறப்பு
2022 - 01 - 16

## திரு. இராஜேந்திரம் விக்டர் சுதந்திர ஜெயராசா

கல்லூரி வீதி வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு. இராஜேந்திரம் விக்டர் சுதந்திர ஜெயராசா அவர்கள் நேற்று (16.01.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜேந்திரம் - எமிலி தம்பதியரின் அன்பு மகனும் தவமணிதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற விக்றோரியா மற்றும் டோராரட்ணதேவி (பிரான்ஸ்), ரட்ணராஜா (பிரான்ஸ்), அருள்ராஜா (பிரான்ஸ்), றூத்தஸ்கதேவி (வோணி - கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாஸ்கரதேவன் (பிரான்ஸ்), றெஜினா (பிரான்ஸ்), லலினி (பிரான்ஸ்), றெக்ஸ் மகேந்திரம்(கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிக் கிரியைகளுக்காக இன்று (17.01.2022) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி திருநகரில் அமைந்துள்ள உறவினரின் இல்லத்திலிருந்து காலை 9.00 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு காலை 11.30 மணியளவில் அன்னாரின் வட்டுக்கோட்டையிலுள்ள இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 3.00 மணியளவில் வட்டுக்கோட்டை தென்னிந்திய திருச்சபைக்குரிய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(9707) 076 793 2598 தகவல் : மனைவி (தேவி)


## காணி விற்பனைக்கு

சண்டிலிப்பாய் சந்திக்கு அருகாமையில்
20 பரப்புக் காணி
1 1/2 மற்றும் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
(நிலப்பரப்பு) (9693)

076 778 8273

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து நுணாவில் செல்லும் A9 பிரதான வீதியில் நல்ல தண்ணீர் பொதுக் கிணற்றடி அருகாமையில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- நிலப்பரப்பு 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- 14 அடி பாதையுடன்
- கைதடி பிள்ளையார் கோயிலில் இருந்து 500 மீற்றர் தூரம்

பார்வையிடும் நேரம் : காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
தரகர் தேவையில்லை, விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (9683)

077 814 7389 | 077 614 7333


## ஓராண்டு நினைவு

அமரர் திருமதி
**சண்முகம் இராசலட்சுமி**

திதி - பௌர்ணமி தைமாதம்



அழகான நாட்கள் அதை நீ அளித்தாய்
அழியாத சோகம் அதையும் நீ கொடுத்தாய்
உன்முகம் காணாது
ஓராண்டு எவ்வாறானதோ!
உன் அன்பை தோற்கடிக்க
மற்றொரு அன்பு ஏது?
அம்மா என்று அழைத்தும்
பதில் வரவில்லை இன்றுவரை...

மண்ணில் 22.06.1940 | விண்ணில் 27.01.2021

குடும்பத்தினர் (9705)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.